# என். எம். கும்பலின் கழுத்தறுப்பு

# நீதியான 21 கோரிக்கைகளை முறியடிக்க சதி

## திரிபுவாத தீவெட்டிகளின் புதிய நாடகம்!


# தொழிலாளி

இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 2 | இதழ் 45 | ஜூலை 18, 1964 | பக்கங்கள் 8 | விலை சதம் 10


**அரசாங்கத்திற்கும் கம்பனிகளுக்கும் தொழிலாளி வர்க்கத்தின் 21 பொதுக் கோரிக்கைகளை சமர்ப்பிக்கப் படுவது மீண்டும் ஒத்திப் போடப்பட்டுள்ளது.**

கடந்த புதன்கிழமை நடைபெற்ற பிரதான தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டிக் கூட்டத்தில் இப் பிரச்சினை பற்றி ஏகமனதாக முடிவெடுக்க முடியாது போனமையால், 21 கோரிக்கைகளை ஆட்சியாளருக்கும், கம்பனிக்காரர்களுக்கும் சமர்ப்பிக்கும் இவ் விஷயம் ஒத்திப்போடப்பட்டுள்ளது.

21 கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது இந்தத் தடவை ஒத்திப்போடப் படுவதற்கான காரணம், சமசமாஜக் கட்சியின் தலைமையிலுள்ள தொழிற் சங்கம் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தமையேயாகும். தொழிலாள வர்க்கத்தை 21 கோரிக்கைகளுக்கான போராட்டத்திற்கு தயார்படுத்தப் போதிய காலம் வேண்டும் என்ற காரணத்தை முன் வைத்து, கூட்டரசாங்கத்தினுள் சேர முயற்சி எடுத்த சமசமாஜக் கட்சியினரும், எம்.ஈ.பியும், திரிபுவாதிகளும் முன்பு இப் பிரச்சினையை ஒத்திவைக்கக் கோரினர். ஆனால், இந்தத் தடவை சமசமாஜக் கட்சியினர் இப் பிரச்சினையை ஒத்திப் போடக் கூறிய ஒரே காரணம் எதிர்வரும் பட்ஜட்டை எதிர்பார்த்தே இது செய்யப்பட வேண்டும் என்பதே.

சமசமாஜக் கட்சியின் இந்தக் காரணம், 21 கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கோ அதற்காகப் போராடுவதற்கோ உரியதல்ல மாறாக, இந்தக் காரணம் 21 கோரிக்கைகளுக்கான போராட்ட உணர்ச்சியை மட்டம் தட்டுவதற்காகவும், பின் தள்ளிப் போடுவதற்காகவும் உருவானதாக இருக்கிறது.

என்றாலும், இந்தத் தடவை இக் கோரிக்கைகளை ஒத்திப் போட வலியுறுத்தியவர்கள் சமசமாஜக் கட்சியினதும், தொழிற் சங்கங்களினதும் தலைவர்களேயாகும். ஆனால் முன்னர் இவர்களுடன் சேர்ந்து இக் கோரிக்கைகள் ஒத்திப்போடவேண்டும் என்று கூறிய எம். ஈ. பி, திரிபுவாதக் கும்பல், இந்தத் தடவை இக் கோரிக்கைகளை உடனடியாக சமர்ப்பிக்கப்பட ஆதரவு தெரிவித்திருப்பதாக அறிகிறோம்.

திரிபுவாத பீட்டர் கெனமன், மெண்டிஸ் கும்பல், 21 கோரிக்கைகளை முன்வைக்க ஆதரவு தரக் காரணம், இவைகளுக்காகப் போராடவேண்டும், வென்றெடுக்க வேண்டும் என்ற இலட்சியத்தினாலோ, நல்லபிலாஷையினாலோ அல்ல. மாறாக, இக் கோரிக்கைகளை முன் வைத்து, அதன் மூலம் ஆட்சியாளரைப் பயமுறுத்தாட்டி, கூட்டரசாங்கத்தில் தமக்கும் மந்திரிப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதேயாகும். அண்மையில் மாத்தரையில் நடந்த ஒரு கூட்டத்தில் திருவாளர் எம்.ஜி. மெண்டிஸ் நிகழ்த்திய உரை திரிபுவாதிகளின் இந்த அந்தரங்கத் திட்டத்தை அம்பலத்திற்குக் கொண்டு வருகிறது. தொழிலாள வர்க்கம் மிகப் பெரிய போராட்டமொன்றுக்கு தயாராகி வருவதாகவும், தம்மைக் கூட்டரசாங்கத்தில் சேர்த்தால் இந்தக் கொந்தளிப்பை ஆட்சியால் ஓரளவு சமாளிக்க வசதி ஏற்படும் என்று திருவாளர் மெண்டிஸ் தனது மாத்தரைப் பிரசங்கத்தில் கூறியுள்ளார்.

இவர்களின் திட்டமென்ன? ''எங்களை ஆட்சிக்குள் சேர்க்காவிட்டால் வேலைநிறுத்தம் செய்வோம்-ஆம், ஆட்சியில் எங்களை இணைக்காவிடில் நிச்சயம் வேலைநிறுத்தம் நடக்கும்'' என்பதே இவர்களின் இன்றைய கோஷமாகும். இதிலிருந்து நாம் அறிவதென்ன? தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளையும் தமது சொந்த நலனுக்கு, ஆட்சியில் மந்திரிப்பதவி பெற இவர்கள் தமது ஆயுதமாக உபயோகிக்க ஆரம்பித்துள்ளார்கள்.

இவர்கள் ஆட்சியினுள் புக முயற்சித்தார்கள். ஆனால், விஷயம் நடைபெறவில்லை. ''எங்களை அழைத்தாலும் இன்று நாங்கள் போகமாட்டோம்'' என்று கூச்சல் போடும் எம். ஈ. பி., ஆட்சிக்கு எதிராகப் போராட இன்று அபிப்பிராயம் தெரிவித்துள்ளது. எம். ஈ, பி யின் இந்த அபிப்பிராயமும், உணர்ச்சி வேகமும், உண்மையில் தொழிலாள வர்க்கத்தின் மீதுள்ள பாசத்தினாலோ, பரிவினாலோ அல்லது விசுவாசத்தினாலோ உருவானதல்ல. இதற்கு மாறாக, உள்ளத்தில் அண்மையில் கிளம்பியுள்ள தனிப்பட்ட குரோத பாவமும், விரோத நோக்கமுமே காரணமாகும். ஆட்சிக்கு எதிரான தொழிலாளர்களின் போராட்டத்தை உருவாக்குவது மூலம் தமது தனிப்பட்ட விரோதங்களை ஈடேற்றிக் கொள்வதே இவர்களின் நோக்கமாகும்.

எம். ஈ. பி க்கும், திரிபுவாதக் கும்பலுக்கும், 21 கோரிக்கைகள் ஆட்சிக்குள் புகுவதற்கான ஒரு ஆயுதமாகியுள்ளது. சமசமாஜிகளைப் பொறுத்தமட்டில் 21 கோரிக்கை 'விக்கவோ கக்கவோ' முடியாத நிலையை உருவாக்கியுள்ளது. ஆனால், 21 கோரிக்கைகளைப்பெற அணி திரண்ட லட்சோப லட்ச உழைப்பாளர் வர்க்கம், புரட்சிகரத் தன்மையுடனும், போராட்ட உணர்வுடனும், உறுதிமிக்க ஐக்கியத்துடனுமே இக் கோரிக்கைகளை முன் வைத்தது. சமசமாஜக் கட்சித் தலைவர்கள் 21 கோரிக்கைகளுக்கும் பின்னால் அணி சேர்ந்த தொழிலாள வர்க்க சக்தியை, தமது கீழ்த்தரமான, படுமோசமான தனிப்பட்ட சுக போகத்திற்கு ஆயுதமாகப் பாவித்து, ஆட்சிக்குள் தலை நீட்டியது. இன்று ஒருபுறம் 21 கோரிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையிலும், மறுபக்கம், இக் கோரிக்கைகளைப் பெற்றுத் தருவதுமூலம் ஆட்சிக்கும் முதலாளி வர்க்கத்திற்கு, நஷ்டம் ஏற்படுத்தவும், அவர்களுக்கு முடியாமலிருக்கிறது அத்துடன், 21 கோரிக்கைகளை முற்றாகக் கைவிட்டால் தொழிலாளர்களிடையே அவர்களின் எதிர்காலம் முற்றாக நிர்மூலமாகிவிடும்.

8-ம் பக்கம் பார்க்க

## யூ. என். பி யின் பாதுகாவலர்கள்!

''யூ. என். பி. மீண்டும் சக்திபெறாமல் இருப்பதற்கு சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு கொடுக்கவேண்டும்'' என்று சமசமாஜக் கட்சி தமது துரோகச் செயலுக்கு காரணம் காட்டியது.

ஆனால், வெலோனா வேலைநிறுத்தப் போராட்டத்தில் கூட்டு அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கை இவர்கள் கூறிய காரணம் உண்மையல்ல என்பதைத் தெளிவாக்குகிறது. வெலோனா வேலைநிறுத்தத் தொழிலாளர்களை பொலிஸ் குண்டாந்தடியால் தாக்கியுள்ளது மேலும் தெளிவுபடுத்துகிறது.

வெலோனா சொந்தக்காரர் இந்நாட்டிலுள்ள மிகப் பிரபல்யமான யூ. என். பி ஆசாமி. இவரும் மற்றும் தொழில் அதிபர்களும்தான் யூ. என். பி.யின் ஜீவநாடி. யூ. ஒன். பி. யை ஒழிக்கவேண்டுமேயானால் அதற்கு ஆதரவளிக்கக்கூடிய ஏகபோக முதலாளிகளின் சக்தியைக் குறைக்கவேண்டும் எனப் பலமுறை நாம் கூறியுள்ளோம்.

இந்த யூ. என். பி. ஆசாமிகளுக்கும், ஏனைய யூ. என். பி. கொள்ளைக் கூட்டத்திற்கும் எதிராக வெலோனா தொழிலாளர்கள் நடத்துகின்ற இந்த வீரம் செறிந்த போராட்டத்தில் பழைய தொழிலாளர்களின் தலைவர்களை உள்ளடக்கியுள்ள அரசாங்கம், தொழிலாளர்களின் பக்கம் நின்றிருக்க வேண்டும். யூ. என். பி. க்கு எதிராக நடைபெறும் இப் போராட்டத் [illegible] டத்தில் தொழிலாளர்களின் [illegible] பக்கம் நின்று யூ. என். பி. [illegible] யின் சக்தியைக் குறைப் [illegible] பதற்குப் பதிலாக என்.எம். [illegible] பெரேராவின் இக் கூட்டு அரசாங்கம். யூ. என். பி. யின் பக்கம் சார்ந்து நின்று தொழிலாளர்களுக்கு குண்டாந்தடி அடிகொடுத்துள்ளது. இந்த மோசமான செயலுக்கு எவ்வித சமாதானமும் கூறமுடியாது.

இந் நாட்டில் யூ. என். பிக்கும், ஏகாதிபத்திய பிற்போக்கு வாதிகளுக்கும் எதிராக்கப் போராடக் கூடியவர்கள் தொழிலாளி வர்க்கம்தான். அதைவிடுத்து யூ. என். பி யால் உருவாக்கப்பட்ட பொலிஸ் ராணுவ அரசாங்க யந்திரத்தால் இது நடைபெற முடியாது என்பதைப் பலமுறையும் நாம் எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி கூறிவந்துள்ளோம். வெலோனாவில் நடைபெற்ற இச் சம்பவம் இதை மேலும் தெளிவுபடுத்தியுள்ளது.

# மலைநாட்டுத் தொழிலாளர்களுக்கு புரட்சிகரத் தலைமை

## செங்கொடிச் சங்கத்தின் பிரதிநிதிகள் மாநாடு

நாளை அட்டன் மாநகரில் கூடுகிறது

செங்கொடிச் சங்கத்தின் விசேஷ பிரதிநிதிகள் மாநாடு இம்மாதம் 19-ம் திகதி (நாளை) அட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. செங் கொடிச் சங்கத்தின் சரித்திரத்தில் ஒரு முக்கிய நிகழ்ச்சியான இம் மாநாடு நடைபெறும் தருவாயில், நமது சங்கத்தின் கடந்த காலத்தைப் பற்றியும், எதிர்காலத்தில் செங்கொடிச் சங்கம் எத்தகைய பணியாற்ற வல்லது என்பது பற்றியும் சிந்தித்துப் பார்த்தல் அவசியமாகின்றது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு மகத்தான சேவை செய்வதற்காகவும், அவர்களை ஸ்பாபன ரீதியில் திரட்டி புரட்சிப் பாதையில் இட்டுச் செல்வதற்காகவும் நமது இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கமாகிய செங்கொடிச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு பல்லாண்டுள் கடந்துவிட்ட போதிலும், தோட்ட முதலாளி வர்க்கத்தின் பலமான எதிர்ப்பினாலும், யு. என். பி. அரசாங்கத்தின் தொழிலாள விரோதக் கொள்கையினாலும் மற்றும் பல காரணங்களினாலும் கடந்த சில ஆண்டுகள்வரை செங்கொடிச் சங்கத்தின் வளர்ச்சி குன்றியிருந்தது.

செங்கொடிச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து சங்கத்தை வளர்க்க பல தோழர்கள் பெருமைப்படக் கூடிய வகையில் பெரும் சேவைசெய்திருந்த போதிலும், மத்திய மாகாணத்திலே, மலைநாட்டுப் பகுதியிலே செங்கொடிச் சங்கம் பெரும் வளர்ச்சியடையவில்லை.

**ஓ. ஏ. ராமையா**

ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. மலை நாட்டிலே, குறிப்பாக அட்டன், தலவாக்கொல்லை, பதுளை, அப்புத்தளை பகுதிகளிலே செங்கொடிச் சங்கம் சக்தி வாய்ந்த சங்கங்களிலே ஒன்றாக வந்துவிட்டது. புதுஅங்கத்தவர்கள் சங்கஅணியிலே திரண்ட வண்ணமிருக்கின்றனர். காங்கிரஸ் சங்கங்களின் பிற்போக்குத் தன்மையும் நமது சங்கத்தின் புரட்சிகரத் தன்மையும் தொழிலாளர்களை எம் பக்கம் சேர்க்கின்றன. பல தோழர்களின் தியாகங்களிலே வளர்ந்தது எம் சங்கம். செங்கொடிச் சங்கத்தை தோட்டங்களிலே ஸ்தாபித்ததற்காக பொலிசாரிடம் அடிபட்டோர் அநேகம். வேலையி

2-ம் பக்கம் பார்க்க

# தொழிலாளத் தோழர்களே, உங்கள் பத்திரிகைகளுக்கு உதவ வாரீர்

## புரட்சிக் கடமைகளில் அதிசிறந்த புரட்சிக் கடமையைச் செய்வீர்

எமது நாட்டுத் தொழிலாளி வர்க்க இயக்கம் இன்று மிகவும் நெருக்கடியான கட்டத்திற்கு வந்துள்ளது. நேற்று வரை தலைமை தாங்கியவர்கள் இன்று தொழிலாள வர்க்கத்துக்குத் துரோகம் செய்து காட்டிக்கொடுத்து விட்டனர். வர்க்கத்தை, வர்க்கப் போராட்டத்தை மறந்து முதலாளி வர்க்கத்துடன் இரண்டறக் கலந்து விட்டனர்.

இன்றைய நிலையில் தொழிலாளர் வர்க்கத்தின் எதிரிகள் பலர். எமது உழைப்பு முழுவதையும் சுரண்டிச் செல்லும் ஏகாதிபத்தியம், முதலாளித்துவம் ஆகியவை மட்டுமல்ல எமது எதிரிகள். எட்டு மணி நேரம் வேலைசெய்ய எம்மைக் கோரும் சீர்திருத்த வாதிகளும், வர்க்க சமரசம், சமாதான சகஜீவனம் பேசித்திரியும் திரிபுவாதக் கும்பலும் எமது எதிரிகள். இவர்களுக்கிடையே தொழிலாள வர்க்கத்துக்கும் பரந்த பொது மக்களுக்கும் தெளிவான பாதையைக் காட்டும் பொறுப்பு இலங்கையில் உள்ள ஒரேயொரு தொழிலாளர் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சிக்கும் தொழிலாளர் ஸ்தாபனமாகிய, இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்துக்கும் விழுந்துள்ளது இயற்கையானதே.

நாம் எமது சீரிய பொறுப்பை நிறைவேற்றுவதற்கு, எமது முக்கிய சாதனம் பத்திரிகைகளாகும். 'கம்கறுவா' 'தொழிலாளி' ஆகியபத்திரிகைகள் மூலம் தான் நாம் எமது கருத்துக்களைத் தொழிலாளத் தோழர்கட்கும் பரந்த பொது மக்களுக்கும் எடுத்துக் கூற முடியும். எமது ஸ்தாபன வேலைகளை நிறைவேற்றுவதற்குக் கூட எமது பத்திரிகைகள் பெரும் உதவி புரிகின்றன. அதனுல்தான் 'பத்திரிகை ஒரு அமைப்பாளன்' என லெனின் கூறினுர்.

ஈழத்துத் தொழிலாளி வர்க்கத்திற்கு சரியான வர்க்க போதமளிக்கும் பணியில் 'கம்கறுவா' 'தொழிலாளி' ஆகிய பத்திரிகைகள் கடந்த காலத்தில் பெரும் பங்கு வகித்தன. அவை எமது நாட்டுத் தொழிலாள வர்க்கத்தின் தனிப்பெரும் பத்திரிக்கைகள்; ஆகவே அவற்றைத் தமது கண்ணின் கருமணியாகப் பேணி வளர்ப்பது தொழிலாள வர்க்கத்தின் தவிர்க்க முடியாத கடமையாகும்.

இன்று எமது பத்திரிகைகள் பெரும் பொருளாதார நெருக்கடிக் குட்பட்டிருப்பதை நாம் குறிப்பிடுதல் வேண்டும். பத்திரிகைகள் நடாத்துவதே நமக்கு மிகவும் பிரச்சினையாகவிருக்கின்றது. சென்ற வாரம் ''கம்கறுவா'' பத்திரிகை நிதி நெருக்கடி காரணமாக நான்கு பக்கங்களுடனேயே வெளிவந்தது. தொழிலாளிக்கும் அந்நெருக்கடி சமமான தாக்குதலை ஏற்படுத்துகின்றது.

இந்நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்காக கம்கறுவா, தொழிலாளி ஆதார நிதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாதத்துக்கு குறைந்தது ஒரு ரூபா கொடுக்கும் 5000 தோழர்களை நாம் திரட்டுவது அவசியமாயுள்ளது. தொழிலாளத் தோழர்களும், ஆதரவாளர்களும், அனுதாபிகளும் இவ் வாதார நிதிகளுக்கு தமது பங்கைச் செலுத்தித் தமது வர்க்கக் கடமையை நிறைவேற்ற வேண்டும் என நாம் அவர்களைத் தோழமையுடன் கோருகின்ருேம்.

கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபன அமைப்பாளரும், இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான தோழர் சண்முகதாசன் பத்திரிகை நிதி பற்றிக் கூறிய ஒரு வசனத்தைத் தோழர்களுக்கு நினைப்பூட்டுதல் அவசியம்.

''கம்கறுவா, தொழிலாளி பத்திரிகைகளின் நிதிக்கு உதவுவது, நிதி திரட்டுவது தோழர்களின் புரட்சிகரக் கடமைகளில் அதிசிறந்த புரட்சிகரக் கடமையாகும்.''

ஆகவே தான் தோழர்களே! இன்று உங்கள் இயக்கம் உங்களது உதவியை வேண்டி நிற்கின்றது. உங்கள் பத்திரிகைகள் கம்கறுவாவையும் தொழிலாளியையும் பேணிக்காக்கவேண்டியது உங்களது தலையாய கடமை.

இன்று பத்திரிகைகளுக்கு நீங்கள் அளிக்கும் உதவி, இந்த நாட்டில் சோஷலிசம் ஸ்தாபிப்பதற்கான உதவி என்பதை மனதில்கொண்டு பணியாற்றுமாறு கேட்டுக்கொள்கின்ருேம்.

## புரட்சி வேண்டும்

செங்கொடிக்கு கீழிருந்து சூளுரைத்திடல்
சீவனற்ற மூடர்களின் மறமடக்கிடல்
சங்கொலித்து வீறுகொண்டு ஓர்கொடியின்கீழ்
சார்ந்திருந்து புரட்சியுடன் உயிர்த்தெழும்புதல்
சிங்களத் துவீபத்தில் பொதுவுடமையாம்
சீர்மறையை நேர்நிறுத்திக் களிப்புக்கொள்ளுதல்
எங்களுக் கினி கடன்எழும் தோழரே!
எங்கள்கொடி எங்குமோங்க வழிசெய்வோம்.

மாசில்லா லெனின் தந்தவழியில் நடந்து
மாவுலகம் அடைத்திடல் எங்கள்கடமை.
காசில்லா தன்மையெங்கள் நாட்டுக்குவேண்டாம்
யாருமொரே சமமென்னும் நிலையமைத்திட
மாசில்லா மனம்கொண்டு மார்த்தட்டுவோம்.
மறம்செய்யும் முதலாளி வர்க்க மொழியும்
தேசில்லா மாவின்மேல் ஆணை யிடுவோம்
தேர்நடத்தி பொதுவுடமைக் கொடிநாட்டுவோம்.

பசித்துயர் கொண்டிங்கு இறப்பதும் மனிதன்
பார்த்திருந்து மகிழ்ந்தின்பம் அடைவதும் மனிதன்
புசித்துயர் விமானத்தில் பறப்பதும் மனிதன்
பாகுபாடு காட்டும்வழி செய்வதும் மனிதன்
பசியற்ற நாடொன்றை அமைத்திட வேண்டும்
பலம்பெற செங்கொடியின்கீழ் நிழல்வேண்டும்,
நசிப்புற்ற தொழிலாளர் நலம்பெற வேண்டும்
நமக்கினிமேல் செங்கொடியின் புரட்சியும்வேண்டும்.

—செவந்திப் பிரியன்

● 1-ம் பக்கத் தொடர்

ழந்து வறுமையால் வாட்டப்படுவோர் ஏராளம். இவர்களின் சோகக் கதைகளைக் கேட்டால் கண்ணீர் பெருகும். ஆத்திரம் பொங்கும்.

எத்தனையோ பேர்களின் தியாகத்தால் வளர்ந்த செங்கொடிச் சங்கத்தை, தோட்டத் தொழிலாளர்களுக்குப் புரட்சிப் பாதையைக் காட்டும் ஒரே சங்கமாம் செங்கொடிச் சங்கத்தை, திரிபுவாதிகள் திசை மாற்றப் பார்த்தனர். தொழிலாள வர்க்கத்தைக் காட்டிக் கொடுக்க தொழிற் சங்கத்தில் நுழைந்திருந்த துரோகிகளாம் திரிபுவாதிகளின் முகத்திரை தக்க சமயத்தில் கிழிக்கப்பட்டது. துரோகிகள் துரத்தப்பட்டனர். பெரும் தலைவர்களென கூறினுரெல்லாம் போன இடம் தெரியவில்லை. இன்று செங்கொடிச்சங்கம் புடம்போட்டத் தங்கமாய் விட்டது.

தோட்டத் தொழிலாளர்களின் புரட்சிக் குரலாய்த் திகழும் செங்கொடிச் சங்கம் இன்னும் வளரவேண்டியிருக்கின்றது. செங்கொடிச் சங்கம் செய்யவேண்டிய சேவைகள் ஏராளம். இந் நாட்டு செல்வத்தின் பெரும் பகுதி தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பிலே பிறக்கின்றது. இலவச வைத்திய சேவை, இலவசக்கல்வி என்று என்னென்னவோ சொல்கின்ருர்கள். இவைகளெல்லாம் தோட்டத் தொழிலாளியின் உழைப்பின் பயனே. சரீர உழைப்பும், பொருள்உற்பத்தியுமே சமுதாயத்தின் அடிப்படையாகும்.

ஆனுல் உழைக்கும் தோட்டத் தொழிலாளர்கள் உதைக்கப்படுகின்றனர். போற்றப்படவேண்டிய தோட்டப் பாட்டாளி மக்கள் பாவிகளென உமிழப்படுகின்றனர். ஒரு முதலாளித்துவ நாட்டில் குடிமக்கள் பெற்றிருக்கும் சாதாரண மனித உரிமைகள்கூட தோட்ட தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன. அவர்கள் இந்திய வம்சா வழியினர் என்பதால். இலட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரஜாவுரிமையில்லை. இது எல்லோருக்கும் தெரியும். இவர்கள் கடலைக் கடக்க முடியாது. காரணம் இவர்களால் பாஸ்போட் பெறமுடியாது. கோடிக்கணக்கான பவுண் பெறுமதியுள்ள பொருளைப் படைக்கும் இவர்கள் பெறும் ஊதியம் ஒரு நாளுக்கு இரண்டு ரூபாவும் சில சதங்களுமே.

வேண்டும். கேட்பாரில்லை, அன்றிக் கொடுப்பாருமில்லை. சிறு குற்றமென்றாலும் பற்றுச்சீட்டுக் கொடுக்கப்படும். கோர்ட்டிலே சிறு தண்டனை பெற்ருலும் வேலை நிறுத்தப்படும். கணவனுக்கு வேலையில்லையென்ருல் மனைவியின் வேலையும் நிறுத்தப்படும். ஏன் குடும்பமே தோட்டத்திலிருந்து வேலைநீக்கம் செய்யப்படும். இருப்பதோ சிறு காம்பிரா, 120 சதுர அடி. இதைவிட்டு வெளியேறவேண்டும். அவனே நாடற்றவன். தோட்டத்தை விட்டுச்சென்ருல் வேலையே கிடையாது, அவன் எங்கே செல்வான், அது அவனுக்கே தெரியாது. படிக்கத் தெரியாதவன்; பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியாதவன். காரணம் பணமில்லை; பிரஜாவுரிமையில்லை. இந்நிலையில் என்றைக்கோ அரசாங்க ஆபிசிலிருந்து கடிதம் வந்தால் அதுவும் சிங்களத்தில்.

செங்கொடிச் சங்கம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இயங்குகின்றது. தொழிலாள வர்க்கத்தின் ஒரே கட்சி கம்யூனிஸ்ட் கட்சி. ஜாதிபாகுபாடு, மதப் பாகுபாடு, இனப் பாகுபாடு இன்றி எல்லாத் தொழிலாளர்களையும் செங்கொடியின் ...ழ் திரட்டி புரட்சிப் பாதை ...ல் அழைத்துச்செல்லும் கட் ...தான் கம்யூனிஸ்ட் கட்சி.

ஈழத்திருநாட்டிலே புரட்சி ...வெற்றிபெற, தொழிலாள ஆட்சி ஏற்பட தோட்டத் தொழிலாளர்களின் பங்கு இன்றியமையாதது. விதேச முதலைப் பாதுகாக்க, சுதேச முதலை வளர்க்க இந்திய வம்சாவழித் தொழிலாளர்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினை கேடையமாக உபயோகிக்கப்படுகின்றது.

தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினையையும் பொருளாதாரப் பிரச்சினைகளையும் சரியான மார்க்சிஸ-லெனினிசக் கண்ணேட்டத்தில் கணித்து, கம்யூனிஸ்ட் கட்சி தோட்டத் தொழிலாளர் மத்தியிலும், மற்றவர்கள் மத்தியிலும் பரப்புதல் அவசியம். எமது தியாகத்தினுலும் சிறந்த சேவையினுலும், எமது கொள்கைகளைச் சரியான முறையில் பிரச்சாரம் செய்வதன் மூலமாகவும் தோட்டத் தொழிலாளர்களை நமது புரட்சி அணிக்குள் எம்மால் திரட்ட முடியும்.

எமது எதிர்காலத் திட்டத்தை நிறைவேற்ற, செங்கொடிச் சங்கத்தின் சக்தியைப் பெருக்க, செங்கொடிச் சங்கத்தின் விசேஷ பிரதிநிதிகள் மாநாட்டினதும், பொதுமாநாட்டினதும் வெற்றி இன்றியமையாதது.

பொது மாநாடு அக்டோபர் மாத மத்தியிலே அட்டனில் நடைமெறும்.

# தீவெட்டிகளின் "மக்கள் சந்தை"

## மோட் கெனமன் தலைமையில் கசிப்புக் கடை

கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டுவிழா என்ற பெயரில், திரிபுவாத சாக்கடைகள் கடந்த 4, 5-ந் தேதிகளில் கொட்டா ரோடு கும்பகர்ணன் கோட்டையில் 'மக்கள் சந்தை' என்ற பெயரில் கேவலமான முறையில் அனுச்சார சந்னத நடத்தினர்.

நான் அங்கு சென்றபோது பொதுமக்கள் அதிகமாக இல்லாதிருந்தாலும்கூட, மத்தியக் கமிட்டி என்ற பெயரிலுள்ள மோட்டுக் கமிட்டியின் புருஷர்கள் கிடைத்தவற்றை முதலில் வேட்டையாடக் குழுமி இருந்தனர். வெள்ளைக்கார மோட் கெனமனின் கீழ், குடிபோதைப் பொருட்கள் விற்பனைக்கு இருந்தன. இந்த கசிப்புக் கடைக்கு இந்த அம்மையார் தலைமை உருவாகவிருந்தது மகா கேவலமாக இருந்தது. இந்த கசிப்புக் கடையில் அதிகமாக ருஷ்ய மதுபானங்களே இருந்தன.

சந்தையில் ஒரே குருஷ்சோவ் மயம். அவ்வளவு மதுபானப் புட்டிகளைத் தந்தமைக்காவது குருஷ்சோவுக்கு படம் போட்டு பிரச்சாரம் செய்யத் தானே வேண்டும்.

கொச்சிக்கடை நாடார் சில்லறைக் கடை நடத்தினுர். ''சீனி, மசாலா, மாவு'' என்று அவர் கூச்சல் போட்டது, சில்லறைக் கடை வியாபாரிகளைப் பிச்சை வாங்கச் செய்தது.

ஒரு கொந்தராத்துக்காரர் சந்தைப் பொருட்களை அறிமுகம் செய்வதாகக் கூறிக் கொண்டு கதறி அழுதார்.

பூசணிக்காய் ஒரு பக்கம், தயிர்ப் பானை ஒருபக்கம், மசால்வடை விவகாரம் மற்ருெரு பக்கம்.

இவைகளினூடே, திரிபுவாதத் தீவெட்டித் தலைவர் பீட்டர் கெனமன் விளையாட்டு என்ற பெயரில் பணம் பறிக்கும் சூதாட்டத்தை ஆரம்பித்தார். நகரிலுள்ள காணிவல் விவகாரம் அது!

தீவெட்டிகளின் கருவாட்டுச் சந்தைக்குச் சென்ற ஒரு தோழர் ஆத்திரம் தாழாமல் எமக்கு எழுதிய கட்டுரையை இங்கு பிரசுரித்துள்ளோம்.

தொழிலாள வர்க்கத்தின் வழிகாட்டியாகவுள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் போர்டை மாட்டிக் கொண்டு, அக் கட்சியின் 21.வது ஆண்டு தினத்தை, அமர போராட்ட நாளை, புனித விழாவாகக் கொண்டாடவேண்டிய வேளையில், மசால்வடையும், பூசணிக்காயும், மதுபானமும் விற்று சாக்கடையாக்கி, மறுபக்கம் சூதாட்டம் போட்டு பேயாட்டம்ஆடியதிரிபுவாதத் திவெட்டகளின் நடத்தை மிக மிகக் கேவலமானது, மட்டரகமானது, மன்னிக்கமுடியாதது.

கட்சியின் புனித தினத்தில் குருஷ்சோவ் கும்பல் கருவாடும், கத்திரிக்காயும் விற்று சந்தை நடத்தட்டும். நாம் புரட்சிகரப் பாதையில்-மார்க்ஸிஸ—லெனினிஸப் பதாகை ஏந்தி முன் செல்வோம். வெற்றி யாருக்கு என்பதை காலம் தீர்மானிக்கும்; சந்தை வியாபாரிகளுக்கா அல்லது புரட்சிவாதிகளுக்கா?-எஸ்.பி.எம்.

காங்கேசன் சிமேந்துத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

# இறுதிவரைப் போராட சங்கற்பம்

## எல்லா நட்டங்களுக்கும் நிர்வாகமே பொறுப்பு

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்துடன் இணைந்துள்ள காங்கேசன் துறை சிமேந்து தொழிற்சாலையில் வேலை செய்யும் காங்கேசன் சிமேந்து ஐக்கிய தொழிலாளர் யூனியனைச் சேர்ந்த 715 தொழிலாளர்கள் சென்ற மாதம் 29-ந் திகதியிலிருந்து வேலைநிறுத்தம் செய்து வருகின்றார்கள்.

### தொழிலாளர் பிரச்சினைகள்

சிமேந்து தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு எண்ணற்ற பிரச்சினைகள் உண்டு. வருடத்தில் 13 நாட்கள் எல்லாத் தொழிலாளர்களும் சம்பளமில்லாமல் வேலை செய்ய வேண்டும். உணவருந்த வசதியான சிற்றுண்டிச் சாலையில்லை. ஓய்வெடுப்பதற்கு வசதியான ஓய்விடமுமில்லை. வேலை நேரத்தில் அணிவதற்கு யூனிபோம் இல்லை. தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வில்லை. தூசி, உஷ்ணம், அபாய அலவன்ஸ் கொடுக்கப்படுவதில்லை. 10 வருடங்களுக்கு மேலாக வேலை செய்யும் தற்காலிக தொழிலாளர்கள் இன்னும் இருக்கின்றார்கள்.

இத்தனைக்கு மத்தியிலும் தொழிலாளர்களை தொழிற்சாலை நிர்வாகத்தினர் மிருகத்தனமாக நடத்துகின்றார்கள்: இம் என்றால் சிறைவாசம் என்ற ரீதியில் தொழிலாளர்கள் அனைவரும் அடக்கி ஒடுக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு கஷ்டமான நிலையில் பாடுபட்டு உழைக்கின்றார்கள்.

### பத்தொன்பது கோரிக்கைகள்

எண்ணற்ற தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக காங்கேசன் சிமேந்து ஐக்கிய தொழிலாளர்கள் யூனியன் 19 கோரிக்கைகளைத் தயாரித்து சிமேந்து கூட்டு ஸ்தாபனத்திடம் சமர்ப்பித்தது.

இக்கோரிக்கைகள் சம்பந்தமாக யூனியன் பிரதிநிதிகள் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனப் பொதுச் செயலாளர் தோழர் சண்முகதாஸன் கூட்டு ஸ்தாபன தலைவருடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தினர். பேச்சுவார்த்தையின் போது கூட்டு ஸ்தாபனத் தலைவர் முக்கியமான நான்கு கோரிக்கைகளை 2 மாதங்களுக்குள் கொடுப்பதாக உறுதி கூறினர்.

கூட்டு ஸ்தாபன தலைவர் ஐரோப்பா சென்றதனால், இந்த 4 கோரிக்கைகளும் எமது தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. பின் உதவித் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தியபொழுது, அவர் கூடிய சீக்கிரம் இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாக உறுதியளித்தார். இதன் பின் உதவித் தலைவரும் ஐரோப்பா சென்றார். எமது பிரச்சினை தீர்ந்தபாடில்லை.

### எட்டு கோரிக்கைகள்

கடந்த 8 மாதங்களாகியும் இப்பிரச்சினை தீராததால் எமது யூனியன் 19 கோரிக்கைகளில் முக்கியமான 8 கோரிக்கைகளைத் தேர்ந்தெடுத்து சென்ற மாதம் 3-ம் திகதி நிர்வாகத்தினரிடம் சமர்ப்பித்து 21 நாட்களுக்கிடையில் பேச்சுவார்த்தைமூலம் தீர்த்துவைக்கும்படி கேட்டுக்கொண்டது. கூட்டு ஸ்தாபன நிர்வாகம் இதற்கு ஒருவித பதிலும் தரவில்லை.



நீர்வை பொன்னையன்
(சி. டி. யூ. எப்.
யாழ். பிரதேச பிரதிநிதி)

இப்பிரச்சினையை சமரசமாகத் தீர்த்துவைப்பதற்கு எமது சங்கம் மேலும் 3 நாட்கள் தவணை கொடுத்தது. நிர்வாகம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

### போராட்டம் ஆரம்பித்தது!

எமது யூனியன் கொடுத்த தவணை 27-ம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு முடிவடைந்தும் பொறுமையுடனிருந்த எமது யூனியன், நிர்வாகத்தினர் செய்த அட்டகாசத்தின் நிர்ப்பந்தத்தினால் 29-ம் திகதி காலை வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்தது.

சிமேந்து தொழிற்சாலையில் வேலை செய்யும் 715 நிரந்தரத் தொழிலாளர்களும் அநேக தற்காலிகத் தொழிலாளர்களும் கட்டுப்பாட்டுடனும் அமைதியாகவும் வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர். இதுவரை எதுவித அசம்பாவிதமான சம்பவமும் நடைபெறவில்லை. தொழிலாளர்கள் அனைவரும் உணர்வு பெற்று போராட்ட உத்வேகத்துடன் தொழிற்சாலை முன் இரவு பகலாகத் திரண்டிருக்கின்றனர்.

### நிர்வாகத்தின் அட்டகாசம்!

சிமேந்து தொழிலாளர்களின் இந்த நேர்மையான உரிமைப் போராட்டத்தை முறியடிக்க நிர்வாகத்தினர் பலவிதத் தந்திரங்களையும் சதிகளையும் அட்டகாசங்களையும் புரிகின்றனர்.

தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கிவிடுவதாக மிரட்டுகின்றனர். தொழிற் சங்கத் தலைவர்கள் மீதும், பல தொழிலாளர்கள் மீதும், பொய்யான முறைப்பாடுகளை பொலிசில் புகார் செய்கின்றனர். லொறி மூலமும், வான் மூலமும் தொழிலாளர்களை வீடுகளுக்குச் சென்று ஏற்றிவர முயன்றனர். 60 தொழிலாளர்களை மட்டும் தொழிற்சாலைக்குள் பலவந்தமாக அடைத்து வைத்துக்கொண்டு, தொழிற்சாலையில் வேலை நடக்கின்றது என்று பாசாங்கு செய்து தொழிலாளர்களையும், பொது மக்களையும் ஏமாற்றுகின்றது நிர்வாகம்.

இத்தனை அட்டகாசங்களைச் செய்தும் நிர்வாகம் நாளுக்கு நாள் தோல்வி கண்டு வருகின்றது. தொழிலாளர்களின் போராட்டம் வீறுநடை போட்டு முன் செல்கின்றது.

### பேராதரவு பெருகுகின்றது

சிமேந்து தொழிற்சாலை நிர்வாகம் இவ்வேலைநிறுத்தத்தை முறியடிக்க எவ்வளவு அட்டகாசம் செய்தும், எதுவித பலனும் அதற்கு கிடைக்கவில்லை.

உரிமைக்காக சிமேந்துத் தொழிற்சாலை தொழிலாளர்கள் நடத்தும் இப்போராட்டத்திற்கு, யாழ்ப்பாணத்திலுள்ள சகல தொழிற் சங்கங்களும், பொது மக்களும் பூரண ஆதரவு கொடுக்கின்றனர். இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் யாழ். பிரதேசக் கிளையின் கீழிருக்கும் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் போராட்ட ஸ்தலத்திற்குச் சென்று நடைபெறும் கூட்டங்களில் கலந்து தொழிலாளர்களுக்கு உற்சாகம் கொடுத்தவண்ணமிருக்கின்றனர்.

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்துடன் இணைந்துள்ள சகல தொழிற் சங்கங்களுடைய ஆதரவும் இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வந்து குவிகின்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள பொது மக்கள் இப்போராட்டத்திற்கு நிதியும் பலவித ஆதரவுகளும் தந்து உதவு முன் வந்திருக்கின்றார்கள்.

### நிர்வாகத்துக்கு எச்சரிக்கை!

இப்போராட்டத்தினால் தொழிலாளர்களுக்கும், அரசாங்கத்தினர்க்கும், பொது மக்களுக்கும் பல ஆயிரக் கணக்கான ரூபாய்கள் நட்டமேற்படுகின்றது. இந்த நட்டத்திற்கு பொறுப்பு நிர்வாகத்தினர்தான்.

எமது யூனியன் இப்பிரச்சினையைத் தீர்க்க நிர்வாகத்தினராகிய உங்களுக்கு பல சந்தர்ப்பங்கள் தந்தும் நீங்கள் இதைப் பயன்படுத்தத் தவறியதால் எமது யூனியனை வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்க நிர்ப்பந்தித்துள்ளீர்கள். இம்மாபெரும் நட்டத்திற்கு நீங்கள்தான் அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் பதில் சொல்லியாக வேண்டும்.

இப்போராட்டத்தை நீடிக்கவிடாமல் எமது யூனியன் முன்வைத்த 8 கோரிக்கைகளையும் உடனடியாகக் கொடுத்து இப்பிரச்சினையை தீர்த்துவைக்கவேண்டும்.

சிமேந்து தொழிற்சாலையிலுள்ள எமது யூனியன் தொழிலாளர்களுடைய இப்பிரச்சினையை உடனடியாக நீங்கள் தீர்த்துவைக்கத் தவறினால், யாழ்ப்பாணத்திலுள்ள சகல தொழிற் சங்கங்களும், பொது மக்களும், நாடு பூராவுமுள்ள இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தில் இணைந்துள்ள சகல தொழிற் சங்கங்களும், இந்த நாட்டிலுள்ள தொழிலாளி வர்க்கமும் சிமேந்து கூட்டு ஸ்தாபன நிர்வாகத்தின் அழுங்குப் பிடிக்கும் அட்டகாசத்திற்கெதிராகவும் போராடத் தயாராக இருக்கின்றன. ஆகவே நிர்வாகத்தினராகிய நீங்கள் உடனடியாக இப்பிரச்சினையைத் தீர்த்துவைக்கவேண்டும்.

---

## தொழிலாளிக்கு ரூ. 200 நஷ்டயீடு

பதுளை பதூர்தீன் மொகமட் கம்பெனியில் ஏற்றுமதி இறக்குமதி வேலைசெய்த பீ. வேலு என்ற தொழிலாளிக்கு பதுளை நாட்டாமைத் தொழிலாளர் சங்கத்தினால் ரூ. 200 நன்கொடையாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

தனது சுகவீனம் காரணமாக வேலை செய்ய முடியாத நிலையிலிருந்த தொழிலாளிக்கு ஏதும் கொடுக்காது தட்டிக் கழிக்க முயன்றது நிர்வாகம்.

நாட்டாமைத் தொழிலாளர் சங்கம் கம்பெனி நிர்வாகத்தோடு இதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியது- நிர்வாகம் ரூ. 200 தருவதற்கு ஒப்புக் கொண்டது.

பேச்சுவார்த்தையில் பதுளை நாட்டாமை தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் தோழர் எச். ஜீ. ஏ. த சில்வா கலந்து கொண்டார்

---

21 கோரிக்கைகள் பெற

# போராட்டப் படை திரளட்டும்

### சதிகாரக் கூட்டத்தை சாய்த்திட வாரீர்

21 கோரிக்கைகளை (இ. போ. ச. ஊழியர்களின் ஒன்பது கோரிக்கைகளும் சேர்ந்தவை) வென்றெடுப்பதற்காகவும், எல்லா இ. போ. ச. ஊழியர்களையும் ஒரே தொழிற் சங்கத்தின் கீழ் அணி திரட்ட வேண்டும் என்ற இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காகவும் வழிசெய்யும் முன்னணியாக இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம் செயலாற்றுகிறது.

தொழிலாளர் வர்க்கத்தின் விரோதியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் மந்திரிப் பதவிகள் சிலவற்றைப் பெற்றுக்கொண்டு அதற்காகத் தங்களை நம்பி நின்ற தொழிலாளர்களையும் அவர்களுடைய 21 கோரிக்கைகளையும் பணயம் வைத்துக் குதர்க்கம் பேசும் திரிபுவாதத் தலைவர்கள், அதிகார வெறிக் கூத்து நடத்தும் இந்த வேளையிலே, அந்த முதலாளி வர்க்கத்தின் அடிவருடிகளின் பலத்தை முறியடிக்கவும், கோரிக்கைகளை வென்றெடுக்கப் போராடவும் நாம் தயாராக வேண்டும்.

இன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிடம் மண்டியிட்டுக் கிடப்பவர்கள் தான் அன்று அதற்கு வால் பிடித்துக் கொண்டு 1963 ஜனவரி-பெப்ரவரி மாதங்களில் சரித்திரப் பிரசித்திபெற்ற இ. போ. ச. வேலைநிறுத்தத்தின்போது அரசாங்கத்திற்குச் சார்பாகச் சதி செய்தார்கள். அவர்களால் விளையக்கூடிய ஆபத்துக்களையிட்டுத் தொழிலாளர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

அந்தப் பிரசித்தி பெற்ற வேலை நிறுத்தத்தின் பயனாகக் கிடைத்த ஒரு கோரிக்கையை இன்று இ. போ. ச.

---

**கடந்த 11, 12-ந் தேதிகளில் செஞ்சிலுவை மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் 17-வது மாநாட்டில் தொழிலாளர்கள் எடுத்த சங்கற்பத்தை இங்கு வெளியிடுகிறோம்.**

---

தொழிலாளர்கள் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். டிரைவர்களுக்கும், பஸ் கண்டக்டர்களுக்கும் வருஷம் தோறும் சம்பள உயர்வு வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை நாம் வென்று அனுபவிக்கிறோம். மற்றக் கோரிக்கைகளுக்காகவும் நாம் தொடர்ந்து போராடவேண்டும்.

இன்று இ. போ. ச.வில் உள்ள அதிகாரிகள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற் சங்கத்திற்கு வெளிப்படையாக உதவி செய்வதோடு, மற்றத் தொழிற் சங்கங்களுக்கு எதிராகச் சதிச் செயல்களிலும் ஈடுபடுகிறார்கள்.

புதிய சபைத் தலைவர் ஒருவரை நியமித்த பின்பும்கூட இ. போ. ச. பழைய கொள்கைகளையே கடைப்பிடிக்கிறது. வேலைநிறுத்தத்தில் தொடங்கி இன்றுவரை கூட்டுக் கமிட்டியின் ஒரு கூட்டம் கூட நடைபெறவில்லை.

இந்த நிலைமையை மாற்ற வேண்டுமெனில் இ. போ. ச. தொழிலாளர்களின் ஒற்றுமையால் மட்டுந்தான் முடியும். இ. போ. ச.வின் உள்ளே பல சங்கங்கள் இருப்பது அவசியமற்றது. இருப்பவை போதாதென்று திரிபுவாதிக் கும்பல் இன்னும் ஒரு சங்கத்தை ஆரம்பித்து உள்ளது. இந்த நிலையில் எல்லா இ. போ. ச. ஊழியர்களும் ஒரே சங்கமாக வேண்டும் என்ற இலட்சியத்தை 21 கோரிக்கைகளை முன்னிறுத்திக் கட்டி எழுப்பவேண்டும். இதற்கு எதிராக முளைக்கும் ஒவ்வொரு சதிச் சக்தியையும் ஒவ்வொரு இ. போ. ச. தொழிலாளியும் எதிர்த்துப் போரிட்டு ஒற்றுமையைக் கட்டி எழுப்பவேண்டும்.

# இதயக் குரல்

# "நான் இன்றுதான் பிறந்தேன்

இன்று நான் பிறந்திருக்கிறேன்!

இன்றுதான் நான் பிறந்திருக்கிறேன்!

இருபத்தினன்கு வயதில் ஒரு தூய்மையான பிறப்பு. ஒரு புது, மிகப் புது மனிதன். நான் பிறந்ததும், எனது உடல், உள்ளம் இரண்டினதும் ஒவ்வொரு அணுவும் புதுப் பெலம் பெற்று விட்டன. பிறந்தவுடன் எனக்குப் பெயர் சூட்டப்பட்டுவிட்டது. எனது நாமம் கம்யூனிஸ்ட்!

எந்த மனிதக் கொடுமைகளையும் கண்டு சகிக்கும் கோழைத் தன்மை என்னை விட்டு அகன்று விட்டது. நான் பிறந்திருக்கும் உலகம் அழகுகள் நிறைந்த பூமி. இங்கு களங்கம் இல்லை; வஞ்சகம் இல்லை: பொருமை இல்லை; எல்லோரும் மனிதர்கள்: எல்லோரும் தோழர்கள். இங்கு தான் நான் உண்மையைக் காண்கிறேன். இங்கே தான் நான் வாழ்க்கையை அனுபவிக்கின்றேன். இவ்வளவு காலமும் நான் வாழ்ந்த வாழ்க்கை வெறும் போலி வாழ்க்கை: ஒரு நடிப்பு. இங்கு நான் மனிதனுகி நிற்கின்றேன். ஒவ்வொரு தோழர்களையும் கூர்ந்து பார்க்கின்றேன். ஒவ்வொருவரும் மகத்தான சக்திபடைத்தவர்கள். ஒவ்வொருவரும் கம்பீரமான மனிதர்கள்; தெளிவடைந்த முகங்கள். எந்தத் துன்பத்தையும் சிரித்த முகத்துடன் சகித்துக்கொள்ளும் இதயம் கொண்டவர்கள். ஓயாத உழைப்பாளிகள்.

நான் முன்பு வாழ்ந்த உலகில் இப்படியான மனிதர்களைக் கண்டதே இல்லை.

## ★ விடுதலைப் போராளிகள்

இதயத்தால் மனிதனை நெசிக்கும் உண்மை அன்பர்கள்! தமது மக்களினதும், நாட்டினதும்* உண்மையான விடுதலைக்காக, இன்பத்துக்காக, தம்மையே தியாகம் செய்யத் தயாராகிவிட்ட விடுதலைப் போராளிகள்.

இவர்களை நான் இங்கு தான் காண்கின்றேன்.

எல்லோரும் ஒவ்வொருவராகவும், ஒவ்வொருவரும் எல்லோருமாகவும் வாழும் தோழர்கள்.

பிறந்த உடனேயே தோழமையின் சக்தியை நான் உணர்ந்துகொண்டேன். ஆனுல் புதுமையாகி விட்டேன்.

நேற்று வரை என்னேடு இருந்த பயணற்ற தன்மைகள் இன்று சாம்பலாகிவிட்டன. நேற்று எனக்கிருந்த வீண் ஆசைகள் தாமாகவே அழிந்து விட்டன. நேற்று என்னை ஆட்கொண்டிருந்த பூர்ஷ்வா எண்ணங்கள் இன்று ஒழிந்து தொலைந்தன.

என்னில் எல்லாமே மாற்றம்; புதுமை, வலிமை. நான் பிறந்திருக்கும் பூமியின் சக்தி அது!

நேற்று நான் வாழ்ந்த வாழ்வை எண்ணும் போது மனதுக்குப் பெரிய பாரம். வீண் காலம், வீண் வாழ்வு. அரை குறை மனிதனுக வாழ்ந்ததையிட்டு பெரிய வேதனை. ஆனுல், இன்று பெற்றிருக்கும் புதிய உயிரும், உடலும் எனக்குத் தரும் இன்பம், அவ்வேதனையைச் சாகடித்து விட்டது.

இன்று எனக்குக் கொள்ளை மகிழ்ச்சி!

இது என் வாழ்க்கையில் புது வகையான மகிழ்ச்சி! இம் மகிழ்ச்சியை நான் என்றுமே அடைந்ததில்லை.

ஆம், நான் கம்யூனிஸ்டாகி விட்டேன்.

## ★ இரண்டாவது பிறப்பு

இது எனது இரண்டாவது பிறப்பு. ஆனுல் ஒவ்வொரு மனிதனும் முதல் வருகையிலேயே இங்கு பிறக்க வேண்டும் என்பது எனது ஆசை.

'நான் கம்யூனிஸ்ட்' என்று கூறும்போது என் கரங்கள் வலிமை பெறுகின்றன. என் இதயம் வீறு பெற்று எழுகின்றது. நான் கெம்பீரமாகிவிடுகிறேன்.

இந்த உலகில் என்னை விட மேலானவன் இல்லை. இருக்கவும் முடியாது!

நான் நாடு, மொழி, இனம், மதம் எல்லாவற்றையும் வென்று நிற்பவன். நான் சர்வதேசி! நான் உலக மனிதன். ஏனென்றுல் நான் கம்யூனிஸ்ட். கம்யூனிஸம் ஒரு வளரும் சக்தி, வளர்க்கும் சக்தி.

'நான் கம்யூனிஸ்ட்' என்று எத்தனை முறை எனக்குள் கூறிக் கொள்கின்றேனே, அத்தனை முறை நான் உயர்ந்து, உயர்ந்து செல்கின்றேன்.

இதற்கு முன் நான் வெறும் சோம்பேறி! எனக்காகவே வாழ்ந்துகொண்டிருந்தேன். என் சுகம், என் இன்பம் தான் எனக்கு முக்கியம். உலகத்தைப்பற்றியே நான் எண்ணியதில்லை. மக்களின், பசி, கொடுமை, துன்பங்களைப்பற்றிக் கவலைப்பட்டதில்லை.

இன்று நான் கம்யூனிஸ்ட்; புதுமையடைந்தவன்; இனி நான் பொறுப்புள்ள செயல்வாதி. எனக்குக் கடமைகள் அதிகம். இனித்தான் எனக்கு வேலை.

## ★ பொறுப்பு உள்ளவன்

நான் ஏன் பொறுப்புள்ளவனுகிவிட்டேன்? எனக்கு என்ன கடமைகள் உண்டு? எனக்கு என்ன வேலை இருக்கின்றது? பழைய பாணியில், மடையன் போல் என்னைக் கேட்டுவிட்டேன்.

நான் ஏன் புதுப்பிறவி எடுத்தேன்?

காலையில் காகம் கரைய எழுந்து, வெறும் வயிற்றுடன் தொழிற்சாலைக்கு ஓட்டமும், நடையுமாகச் சென்று, இருளும் வரை ஓய்வின்றி உழைத்துக் கொடுத்துவிட்டு, வீட்டுக்கு வரும் தொழிலாளிக்கு உழைத்த களைதீர உண்ண உணவில்லை, மாற்றி அணிய உடையில்லை. அதேபொழுது, தொழிலாளி பெருமூச்சு விடும் அதே வேளையில், உற்பத்திச் சாதனங்களைத் தன் உடமையாக்கிக்கொண்ட முதலாளி, அந்த ஒரு காரணத்துக்காக தொழிலாளி வர்க்கத்தின் சமூகத் தன்மை பெற்ற உழைப்பைச் சுரண்டி அள்ளிப் பூரிப்படைகின்றுன். உழைக்காமல் இன்பத்தில் விழையும் முதலாளி?

உழைத்தும், வயிற்றைச் சுருக்கி வறுமையில் வாடும் தொழிலாளி வர்க்கம்?

அவ்வர்க்கம், தன் தற்காலிக உரிமைகளுக்காக வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் பொழுது, சுரண்டும் முதலாளியைக் காப்பாற்றவும், தொழிலாளி வர்க்கத்தை நசுக்கி அடக்கவும் இராணுவம் ஓடி வருகின்றது. பொலிஸ் உதவி அளிக்கின்றது, அரசாங்கம் சட்டம் போடுகின்றது.

தொழிலாளி வர்க்கத்தின் கை அசையாவிட்டால் உலகத்தின் உயிர் இயங்காது என்பது எல்லோருக்கும் தெரியும்.

அப்படி இருந்தும், ஏன் இந்தக் கொடுமை?

நிலச் சொந்தக்காரன், ஏழை விவசாயிகளைத் தன் நிலத்தின் அடிமைகளாக்கி, அவர்களைகொண்டு நிலத்தை விளைவித்துப் பயன் முழுவதையும் தானே அனுபவித்துக்கொள்கிருன். எலும்புகள் நோக இரத்தம் சிந்தி உழைத்த விவசாயி பெறுவது வறுமை, பசி, பசி! என் சகோதரி, தன் பிள்ளைகளுடன் தெருவில் நின்று வானத்தையும் பூமியையும் பார்த்த வண்ணம் அங்லாய்க்கிருள். நிலச் சொந்தக்காரன் வாட்கைப் பணத்துக்காக, அவள் வீட்டையும் அழித்து அவளை நடுத் தெருவில் விட்டு விட்டான். அவன் செய்யவில்லை, அவனுக்காகப் பொலிஸ் அந்த வேலையைச் செய்தது.

ஏன் இவர்களுக்கு நிலமில்லை?

## ★ ஐயோ கொடுமை

என் போன்ற இலட்சக்கணக்கான வாலிபர்கள் வேலையின்றி, எதிர்கால நம்பிக்கையுமின்றி ஏங்குகிருர்கள். தொகை பெருகிக்கொண்டே இருக்கின்றது. நாட்டின் முன்னேற்றத்துக்குப் பயன்பட வேண்டிய இவர்களின் உழைப்புச் சக்தி ஏன் வீணுக்கப்படுகின்றது? அவர்கள் ஏன் வறுமை யடைகின்ருர்கள்?

ஏழைகளாகப் பிறந்த ஒரே காரணத்தால், தம் பருவ ஆசைகளைத் தம் மனதுக்குள்ளேயே அடக்கி அழுந்திக் கன்னிகளாகக் காலங்கழிக்கும் அதரவற்ற பெண்களின் முகங்களில் வடியும் கண்ணீர் எனக்குத் தெரிகின்றது.

ஒருவயிறு சோற்றுக்கு உழைக்க வழியின்றி, தம் 'கற்பை' விற்று மானமிழந்து வயிற்றை நிரப்பும் சோதரிகள் என் கண் முன்னே திரிகிருர்கள்!

ஐயோ! பசிக் கொடுமையினுல் வாழவும் வழியின்றி தனது மனைவி மக்களையும் கொன்று தானும் தற்கொலை செய்யும் கொடுமையைக் காண முடிகின்றது.

பெற்ற பிள்ளையைக் கொன்று தானும் இறக்கும் தாய்மார்களும், பெற்ற பிள்ளையை விற்று வயிறு நிரப்பும் அம்மாக்களும் என்னேடு வாழ்கிருர்கள்.

களவு எடுத்துப் பிழைக்கும் மனிதர்கள்!

ஏமாற்றிப் பிழைக்கும் மனிதர்கள்!

மனிதனை மனிதன் கொல்லும் கொடுமைகள்!

சூது, வஞ்சகம், பொருமை கொண்ட உயிர்கள்! அவற்றினுல் ஏற்படும் கலகங்கள்! விபரீதங்கள்! அமைதியின்மை! இவை எல்லாம் ஏன்?

இன்பத்துக்காகவே பிறந்த மனித உயிர்கள், இன்பத்தையே வாழ்வில் அனுபவிக்க வேண்டிய உரிமையாளிகள். பிறக்கும் பொழுதே துன்பத்தில் பிறந்து, தாம் அனுபவிக்க வேண்டிய இன்பத்துக்காக' அந்த இன்பம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் பிறந்தது முதல் துன்பத்திலும் வேதனையிலும் அழுந்தி உழைத்து, இறுதியில் அந்த இன்பமுமின்றி, இன்பத்தை அடையும் வேதனையான முயற்சிலேயே வாழ்க்கையை முடித்துக்கொள்கின்ற பரிதாப மனித ஜென்மங்களின் உலகம் நான் வாழும் உலகம்.

## ★ முதலாளித்துவ சமுதாயம்

இந்த நீதியற்ற கொடுமைகள் எல்லாம் ஒருங்கே நிகழும் இடம் எது?

முதலாளித்துவ சமுதாயம்!

முதலாளித்துவச முதாயம்!!

இந்த சமுதாயத்தை நான் முற்று முழுதாக வெறுக்கிறேன்!

மனித உயிர்கள் துன்பத்திலும், வறுமையிலும், பசியிலும் கழிக்கும் ஒரு கணப்பொழுதையும் என்னுல் பொறுக்க முடியாது! அந்த ஒவ்வொரு கணப்பொழுதிற்காகவும் என் மனம் புழுங்கி அவிகின்றது. ஏனென்றுல்-மனிதஇனம் இன்பத்துக்காகவே பிறந்தது!

இன்பத்துக்காகப் பிறந்த மனித வர்க்கம் இன்பத்தை ஏன் முற்றுக இழந்து நிற்கின்றது? காரணத்தை எனக்குள் நான் ஆராய்ந்தேன்.

மனிதனின் முக்கிய வாழ்க்கைத் தேவையான உணவு, உடை, வீடு. இவற்றிற்கு அவசியமான பொருட்களைஉற்பத்தி செய்வது தொழிலாளி வர்க்கம். இப் பொருட்களை உற்பத்திச் செய்யும் சாதனங்களைத் தனியுடமை யாக்கிக்கொண்ட சுரண்டும் சிறு கூட்டமான முதலாளி வர்க்கம், அவ்வுற்பத்திக் கருவிகளைக்கொண்டு உற்பத்தி செய்யும் பொருட்களை, அவற்றின் முழுச் சொந்தக் காரராண தொழிலாளி வர்க்கத்திடமிருந்து முற்றிலும் பறித்துக்கொண்டு, அதன் சமுகத்தன்மை பெற்ற உழைப்புக்காக வெறும் கூலியை மட்டும் கொடுக்கின்றது. முதலாளி வர்க்கத்தின் முக்கிய நோக்கம் லாபம்! லாபம்! மேலும் மேலும் லாபம். அது கொடுக்கும் கூலி தொழிலாளி வர்க்கம், அடுத்த நாள் வேலைக்கு வர உயிருடனிருக்கவே போதுமானது.

தனது நியாயமான உரிமைகளுக்காக தொழிலாளி வர்க்கம் கிளர்ந்தெழும் பொழுது முதலாளி வர்க்கம், அதை நசுக்கி ஒடுக்கவும், தனது உரிமைகளையும், உடைமைகளையும் பாதுகாக்கவும் அரசாங்கம், பொலிஸ், இராணுவம் என்பவற்றை ஆயுதங்களாகப் பாவிக்கின்றது.

## ★ ஒரே காரணம்

முதலாளி வர்க்கம் இந்தச் சக்தியை எப்படிப் பெற்றது?

உற்பத்திச் சாதனங்களைத் தன்னுடமையாக்கி அபகரித்துக் கொண்ட ஒரே காரணம். அதைத் தவிர வேறு ஒரு காரணமும் அதன் பக்கம் இல்லை.

எல்லாச் சமூகக் கொடுமைகளுக்கும் இதுவே காரணம். சுரண்டலும், கூலி உழைப்பும், வறுமையும், துன்பமும், சமூகக் கொடூரங்களும், ஒழுங்கீனங்களும் அழிய வேண்டுமானுல் முதலாளித்துவம் அழிய வேண்டும். முதலாளித்துவ சமுதாய அமைப்பு ஒழிக்கப் பட வேண்டும்!

எனக்கு முழு நம்பிக்கை! இரும்பான உறுதி.

முதலாளித்துவம் அழிந்தே தீரும். அதன் அழிவில் தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கபேதமற்ற சோஷலிஸ சமுதாயம் வந்தே தீரும். ஏனென்றுல் உலகம் இயங்கிக்கொண்டே இருக்கிறது; முன்னேறிக்கொண்டே இருக்கின்றது.

இந்த உலகில், முதலாளித்துவம் அழியும் சக்தி!

தொழிலாளி வர்க்கம் வளரும் சக்தி!

காரணத்தை முற்றுக நான் தெரிந்து கொண்டேன். அறிந்துகொண்ட பின் அதை ஒழிப்பதற்கு என் பங்கைச் செலுத்தாமல் விட்டேனுகில் நான் எனக்கே துரோகம் செய்தவனுவேன்.

என் இன்பத்துக்கு வழி அறிந்து கொண்டேன்.

இனி நில்லேன்; அஞ்சேன்.

நண்பர் பென்-பாலன் இளைஞர் ... சிறந்த இலக்கியப் படைப்புக்களால் ...

24-வது வயதில் அவர் எமது ... சிந்தனையில் ஆயிரமாயிரம் எண்ண... இக் கருத்துப்படையல் நம் ந... உத்வேகம் பாய்ச்சுகிறது. படித்து...

நான் பிறந்திருக்கும் இடம் என் இலட்சியத்தை நோக்கி இயங்க வைக்கும் மானதசக்தி! பெரும் சக்தி.

## ★ சிறந்த கௌரவம்

அந்தப் பெரும் சக்தியைப் பற்றி, எனது கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி எனக்குள் நான் எண்ணும் போது, கட்சியையே தனது உயிராக்கி, அந்த உயிருக்காகவே தன் உடலை அழித்துக் கொண்ட, சீனத்தின் கீர்த்திமிக்க புரட்சிகரப் போராளி, எனது மூத்த தோழன் (எப்.) பாங்-ஷி-மின் எழுதியதையே உச்சரித்துக் கொள்கிறேன்:

'எதிரிகள் என்னதான் சபித்தாலும், இழிவுபடுத்திக் கூறினுலும் கம்யூனிஸ்ட் கட்சி மிக உயர்ந்த முன்னேறும் வர்க்கமாகிய தொழிலாளி வர்க்கத்தின் கட்சியாகவே இருக்கின்றது. அது விரிந்த புரட்சிகரத் தத்துவத்தையும், புரட்சிகரத் திட்டத்தையும், மகத்தான கொள்கையையும் வைத்திருக்கின்றது. அது இரும்புக் கவசமணிந்த, கட்டுப்பாட்டு ஒழுங்கமும், முறையான யுத்த த...

# ஒரு வார்...

அரசியல் சந்தையில் ...மவுசிழந்து இன்று கோவணுண்டிகளாக, பதவிப்பிச்சைகேட்டு முழந்தாழிட்டு நிற்கும் தொழிலாளர் துரோகிகளான திருவாத வியாபாரிகள், அண்மையில் கொட்டாஞ்சேனையிலுள்ள சூழ்ச்சி மண்டபத்தில், 'மாக்கள் சந்தை' நடாத்தினர். தொழிலாளர் இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை...

வெளிவந்துவிட்டது

கம்யூனிஸ்ட்

மார்க்சிஸ-லெனினிஸ தத்துவ ஜூன் மாத இதழ்

ஆசிரியர்: நா. சண்முகதாசன்

கிடைக்குமிடம்: 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2

# ...தேன்! என் நாமம் கம்யூனிஸ்ட்''

ண்டே இருக்
க்கொண்டே
முதலாளித்
தி!
ர்க்கம் வள
ற்ருக நான்
ன். அறி
அதை ஒழிப்
கச் செலுத்
ில் நான்
செய்தவ
த வழி அறி
அஞ்சேன்.

திரமும், உபாயங்களும் கொண்ட ஒரு பரிபூரண அமைப்பு. அதில் பெருந் தொகையான கட்சித் தோழர்கள் இருக்கிருர்கள். அவர்கள், புரட்சியில் உண்மையான விசுவாசமுள்ளவர்களிடையில் மிகக் கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்கள். அதன் தலைவர்கள், சகல கட்சி அங்கத்தவர்களாலும் மிகுந்த அன்பும், மரியாதையும் அளிக்கப்படும் உன்னத தோழர்கள். தொழிலாளி வர்க்கத்துக்கும், சகல உழைப்பாளி மக்களுக்கும் அது முறையான தலைமை அளிக்கின்றது.

''தொழிலாளி வர்க்கத்தினதும், சகல மக்களினதும் விடுதலை கட்டி அமைக்கும் பணியில் முன்னணி வீரனுவேன்'.

நான் எந்நேரமும் செயலுக்கு ஆயத்தம். இப்போழுதே! இன்றே! என் பக்கத்தில் துப்பாக்கி கிடக்கின்றது. என் கரங்கள் அதைத் தூக்குவதற்கு ஆயத்தமாக இருக்கின்றன. அந்தத் துப்பாக்கியின் குறிக்கு ஒரு 'பார்வை' உண்டு. அதுதான் எனது குறிக்கோள். ஏகாதிபத்தியத்தையும், முதலாளி வர்க்கத்தையும், நிலச் சொந்தக்காரர்களையும் எதிர்த்து, அவர்களை நிராயுதபாணிகளாக்கிச் சுரண்டலுக்கும் வறுமைக்கும் ஒரு நிரந்தர முடிவு கட்டுவேன்.

பலாத்காரத்தை அடக்கி அழிக்கவே! முதலாளி வர்க்கத்தின் பலவந்தமான நிர்ப்பந்தம். அதனுல் தான் என் பக்கத்தில் துப்பாக்கி இருக்கின்றது.

அதிகாரத்தில் உள்ள முதலாளி வர்க்கமும், அதனைச் சார்ந்த சுரண்டல்காரர்களும், இதுவரை அனுபவித்த தமது ஆட்சி, உரிமைகள், உடைகள் என்பனவற்றை, 'இது உங்களுடையது தான், நாம் அனுபவிப்பது அநீதி; எனக்கு வேண்டாம்' என்று அன்பளிப்பாகத் தொழிலாளி வர்க்கத்திடம் ஒப்படைத்து விட்டுச் செல்லக்கூடியவர்கள் அல்லர். அப்படியான இயல்பு படைத்தவர்க்கமல்ல அந்த வர்க்கம். அதற்கு வரலாறும் இல்லை. அது ஏன் அரசு, இராணுவம், பொலிஸ் என்னும் ஆயுதங்களை வைத்திருக்கிறது? அதை நாம் தெரிய வேண்டும்.

தொழிலாளி வர்க்கம், அதனிடமிருந்து ஆட்சியையும், உரிமைகளையும், உடமைகளையும் பலவந்தமாகவே பறிக்க வேண்டும். அப்படிச் செய்யும்படி முதலாளி வர்க்கம் நிர்ப்பந்திக்கிறது. அப்படிப் பறித்துக்கொண்டதும் ''அவைகள் யாரிடம் சேரவேண்டுமோ அவர்களிடம் சேர்ந்து விட்டது. உரிமையாளர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்'' என்று தம்பாட்டில் சமாதானமாக இருக்கப்போவதில்லை. அது அதன் தன்மையும் அல்ல. அது தன் இழந்த சுகங்களை மீண்டும் பெறுவதற்கு, தன்னுல் இயன்ற மட்டும் சக்தியை ஒன்ருக்கி தொழிலாளி வர்க்கத்தை நசுக்குவதற்கு மிகப் பயங்கரமான பலாத்காரத்தில் ஈடுபடும். அதுதான் அதன் வர்க்கக் குணும்சம். அது எந்தக் காலமும் மாருது.

## ★ மடையர்கள்

யார் சமாதானத்தின்விரோதிகள்? பலாத்காரவாதிகள்?

இந்த வரலாற்று நியதியை மறந்து, 'முதலாளி வர்க்கம் இன்று அப்படி இல்லை, அது பலாத்காரத்தில் இறங்காது. சமாதானமாக விட்டுக்கொடுக்கும்' என்று கூறுபவர்களை 'மடையர்களே!' என்று ஆத்திரத்துடன் முகத்தில்தான் அறைவேன்.

'நாம் வலிந்து சண்டைக்குப் போகவும் மாட்டோம், வந்த சண்டையை அடக்காது விடவும் மாட்டோம்'

எங்களுக்குப் புத்தி கூறும் சமாதானச் சோம்பேறிகளே, உங்களை நாம் மன்னித்து விட்டோம். நீங்கள் முதலாளி வர்க்கத்திடம் செல்லுங்கள். அவர்களுக்கு பலாத்காரத்தின் பயங்கரத்தையும், சமாதானத்தின் முக்கியத்துவத்தையும்பற்றிப் போதியுங்கள். ஒரு வேளை நீங்கள் சுறு சுறுப் படைவீர்கள்.

''முதலாளிகளே! நிலப் பிரபுக்களே! சுரண்டல்காரர்களே! அமைதியாக இருங்கள். அவர்களுக்கே உரிமையானதை அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும். நீங்கள் ஒரு சிறு, மிகச் சிறு கூட்டம். இவ்வளவு காலமும் அவர்களைச் சுரண்டி அனுபவித்த சுகம் காணும். அது உங்களுக்கு லாபம் என்றிருங்கள். அவர்களை எதிர்த்துப் பலாத்காரம் செய்யாதீர்கள். அவர்களை நீங்கள் வெல்ல முடியாது. அது ஒரு பெரும் சக்தி படைத்த வர்க்கம். வீண் இரத்தம் சிந்தலும், உயிர்ச் சேதமும் தான் ஏற்படும். அதனுல் உங்களை உணர்ந்து சமாதானமாக இருங்கள்!'' என்று போதியுங்கள்.

அது ஒருவேளை உங்கள் வழியில் உங்களுக்கு வெற்றியைத் தரலாம். ஆனுல் ஒன்று, முதலாளி வர்க்கத்தின் குணும்சம் எக்காலமும் ஒன்றுதான் என்பதை மறந்து விடாதீர்கள். நீங்கள் இப்போதைக்கு நம்பாவிட்டாலும் மண்டையில் எழுதி வைத்திருங்கள்.

வரலாற்று நியதியையும், வர்க்க குணும்சங்களையும் நன்கு தெளிந்து கொண்ட மாமேதை மார்க்ஸ் கூறியதை நான் விசுவாசிக்கிறேன்.

## ★ லெனின் பட்டாளத்தவன்

நான் லெனின் பட்டாளத்தினன்.

''பலாத்காரம், புதிய சமுதாயத்தைத் தன் கர்ப்பத்தில் கொண்டுள்ள பழைய சமுதாயத்தின் தாதி.'' நானும், எனது தோழர்களும் அத் தாதியின் சக்தியாவோம். புதிய சமுதாயத்தைப் பிறப்பித்து எடுக்கும் அத்தாதியின் கரங்களின் வீரியமுள்ள அணுக்களாவோம். அந்தக் கரங்களின் இயக்கத்துக்காக எனது இரத்தம் கொடுப்பேன்; உடல் கொடுப்பேன்; உயிர் கொடுப்பேன்.

அதே போது எமது தளபதி லெனினின் கட்டளையும் ஒன்று உண்டு. அதை நிறைவேற்றுவது எனது தலையாய கடமை.

என் அணியில் இருந்து கொண்டு, ஆயுத எழுச்சிக்கு எதிர்ப்பவர்களையும், அதற்குத் தயார் செய்யாதவர்களையும், துப்பாக்கி தூக்க கை நடுங்குபவர்களையும், தாமதமின்றி எனது அணியில் இருந்து நீக்கிவிடுவேன். அவர்களுக்கென்று பொந்துகள் இருக்கின்றன. அந்தக் கோழைகள் அங்கு சென்று பதுங்கிக்கொள்ளட்டும்.

நான் விடுதலை வீரன், லெனின் கீர்த்திமிக்க பட்டாளத்தினன்.

எனக்கு ஒரே ஒரு ஆசை; அது தான் முழு ஆசையும்.

நான் எனது தோழர்களுடனும், நாட்டு மக்களுடனும் சோஷலிஸ சமுதாயத்தில் ஒரு கணமேனும் வாழ்ந்து இறக்க வேண்டும். நிச்சயம் அது நடக்கும். ஒளி தெரிகின்றது.

## [ பென். பாலன் ]

பன்-பாலன் இளைஞர். மிக வேகமாக வளர்ந்து வரும் எழுத்தாளர் - தனது
ப் படைப்புக்களால் சொற்ப காலத்திலேயே புகழ் பெற்று விளங்குபவர்.

யதில் அவர் எமது கட்சியில் உறுப்பினரானார். உறுப்பினராகியதும் அவர்
ஆயிரமாயிரம் எண்ண அலைகள் முட்டி மோதின. உணர்ச்சிப் பிழம்பாகவுள்ள
டையல் நம் நாளங்களுக்கும், நரம்புகளுக்கும் மின்சாரம் போன்ற
ச்சுகிறது. படித்துப் பாருங்கள்.

— ஆசிரியர்.

க்கும் இடம்
த நோக்கி
ானதசக்தி!

வம்

சக்தியைப்
யூனிஸ்ட்
எனக்குள்
ாது, கட்சி
ிராக்கி,
கவே தன்
கொண்ட,
ிக்க புரட்
ானது மூத்த
ங்-ஷி-மின்
உச்சரித்துக்
தான் சபித்
த்திக் கூறி
கட்சி மிக
றும் வர்க்க
ளி வர்க்கத்
இருக்கின்
புரட்சிகரத்
புரட்சிகரத்
மகத்தான
வைத்திருக்
ம்புக் கவச
ட்டு ஒழுக்
யுத்த தந்

தலைக்காக அரும் முயற்சிகளை எடுத்து, கடும் போராட்டங்களை நடத்தி, தன்னையே பரித்தியாகம் செய்தும், செய்யவும் எப்பொழுதும் தயாராக இருக்கின்றது.

'ஒரு கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவன்!- இது ஒரு மேன்மை தங்கிய உன்னதமான கௌரவம்! கட்சி அங்கத்தவனுக இருப்பதற்கு, கட்சியில் சேருகிறேன் என்பதில் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி!

'ஆகையால், எனது கட்சிக்காக, எனது சகலதையும், வாழ்க்கையையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.'

இவை என் உணர்வோடு கலந்து விட்டன. உச்சரிக்க உச்சரிக்க மூச்சினிலே ஒரு சக்தி பிறக்கின்றது. அந்த சக்தியில் ஒரு சபதமெடுத்து விட்டேன்.

## ★ நான் ஆயத்தம்

'கொடுமைகள் நிறைந்த முதலாளித்துவ சமுதாயத்தை ஒழித்துக்கட்டி, வர்க்கக பேதமற்ற இன்பம் பொங்கும் சோஷலிஸ சமுதாயத்தைக் கட்டி அமைக்கும் பணியில் முன்னணி வீரனுவேன்'.

## ★ சமாதானமா? பலாத்காரமா

என் வழி சமாதானமா? பலாத்காரமா?

என் வழி சமாதானம்! என் குறிக்கோள் சமாதானம்! என் வாழ்வு சமாதானம். என்னைப் போல் மனித நேசனையும், சமாதான விரும்பியையும் உலகத்தில் எந்த மூலை முடுக்கிலும் கண்டுபிடிக்க முடியாது. மனிதனின் ஒரு துளி இரத்தமும், ஒரு சின்ன உயிரும் வீணுக மடிவதை என் ஆத்மா பொறுக்காது. மனித இரத்தத்தைக் கண்டு நான் அழுகின்றேன்.

என்னிடம் சமாதானத்தின் முக்கியத்துவத்தையும், பலாத்காரத்தின் பயங்கரத்தையும் பற்றிப் போதிப்பவர்களை மன்னித்து விடுகின்றேன். அவர்களின் அறிவீனத்துக்காக அனுதாபப்படுகின்றேன்.

நான் பலாத்கார வாதி அல்லன்; பலாத்காரத்தை அடக்குபவன்! சோஷலிஸ சமுதாயத்தின் முன்னணிக் காவல் படையினன்! பின்பு நான் ஏன் துப்பாக்கியைத் தூக்க ஆயத்தமாகி நிற்கின்றேன்?

## 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' பற்றிய கருத்தரங்கம்

ஈழத்து இலக்கிய வளர்ச்சி பற்றியதோர் கருத்தரங்கம் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கொழும்புக் கமிட்டியால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இம்மாதம் 18-ம் திகதி மாலை 5 மணிக்கு கிராண்ட்பாஸ் நாராயண குரு மண்டத்தில் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கத்தில் பல் வேறு அபிப்பிராயங் கொண்டவர்களும் தமது இலக்கியக் கருத்துக்களை முன் வைப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இளங்கீரன், கனக செந்திநாதன், சில்லையூர் செல்வராசன், எஸ். பொன்னுத்துரை, கா. சிவத்தம்பி, மு. தளையசிங்கம், எச். எம். பி. முஹிதீன், கே.எஸ். நடராசா, அ.ந.கந்தசாமி, என்.கே. ரகுநாதன், எப். எக்ஸ். ஸி. நடராசா ஆகியவர்கள் கருத்தரங்கத்தில் பங்கு பற்ற அழைக்கப்பட்டிருக்கிருர்கள். இ. மு. எ. ச. கொழும்புக் கமிட்டியின் உபதலைவரான முருகையனின் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

# ...வார்த்தை போக்கற்றவர்களின் சேட்டை

ந்ததயில்
கோவணுண்
ச்சைகேட்டு
ும் தொழி
ளான திரிபு
ிகள், அண்
ா ரேட்டி
ண்டபத்தில்,
நடாத்தி
ர் இயக்கத்
கொள்கை

களை விற்று, அமரத்துவம் மிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் கோட்பாடுகளைப் பணத்துக்காகவும், பதவிக்காகவும், சலுகைகளுக்காகவும் அடகு வைத்த இக் கும்பலின் பச்சை பச்சையான வியாபாரங்கூட இந்த வருடம் மோசமாகப் படுத்துவிட்டதைப் பார்க்கும் பொழுது பரிதாபமாகத்தான் இருக்கிறது.

பல லட்சக்கணக்கான தியாகிகள் தமது உயிரைத் தியாகம் செய்து வளர்த்தெடுத்த கம்யூனிஸ்ட் கட்சியின் செங்கொடியை உயரத் தூக்கி உலகத்துக்குப் புரட்சிப் பாதை காட்ட வேண்டியவர்கள் உப்பு, மிளகாய், கருவாடு, அரிசி வியாபாரம் செய்து பணம் சம்பாதிக்கும் அவல நிலையை நினைக்கும் பொழுது எமது நெஞ்சம் இரத்தம் கக்குகிறது. இவர்களின் வியாபாரத்தைப் பற்றியும், புதிய சுரண்டல் 'நாடார்களினதும்' 'பண்டிதர்களினதும்' கலகலப்பையும் பற்றியும் எழுதி எமது பத்திரிகையை அசிங்கப்படுத்த நாம் விரும்பவில்லை.

ஆனுல், எமக்கு மட்டுமல்ல, இந்த நாட்டின் லட்சோப லட்சம் தொழிலாளர்களின் இதயங்களைப் புண்படுத்தி, இரத்தம் வடியச்செய்யும் நிகழ்ச்சி ஒன்று இந்த மானங்கெட்ட வியாபாரச் சந்தையில் நடைபெற்றது. ஆம்! அதைப் பற்றி எழுதும் பொழுது எமது பேனு கூட இரத்தம் கக்குகின்றது.

எமது நாட்டுத் தொழிலாள வர்க்கத்தின் ஈடிணையற்ற தலைவனுகிய தோழர் சண்முகதாசனின் கேலிப் படம் ஒன்றை வரைந்து, அப்படத்தின் கண்களுக்கு ஈட்டி எறியும் போட்டியொன்று இச் சந்தைக்காரத் துரோகிகளால் ஒழுங்குபடுத்தப்பட்டது. இச் செயலைக் கண்ட நண்பர்களும் அறிந்த தோழர்களும் ஆத்திர உணர்ச்சி மேலிட்டு நின்றதும் வியப்பில்லை.

திரிபுவாதிகள் தோழர் சண்ணின் கண்களுக்கு ஈட்டி எறிவது புதுமையல்ல. இவர்கள் ஏற்கெனவே தொழிலாளவர்க்கத்தின் கண்ணின் கருமணியான மார்க்சிஸத்துக்கே ஈட்டி எறிந்து தோற்றுப்போனவர்கள். ஈழத்துத் தொழிலாள வர்க்கத்தின் ஞானக் கண்ணுகவும், மார்க்சிஸ மெய்ஞானத்தைப் பாதுகாக்கும் பெரும் படையின் தலைவனுகவும் திகழும் தோழர் சண், திரிபுவாதிகளின் பரம வைரியானது இயற்கையே.

ஆனுல், ஒன்றுமட்டும் நிச்சயம். இன்றில்லாவிட்டால் நாளை ஈழத்துத் தொழிலாள வர்க்கம்முதலாளிவர்க்கத்தின் உற்ற துணைவர்களாகிய இத் திரிபுவாத் துரோகக் கும்பலின் கண்களில் ஈட்டிபாய்ச்சி, நெஞ்சங்களைப் பிளந்து உதிரம் குடித்துத் தனதுவர்க்க குணத்தையும் பலத்தையும் காட்டியே தீரும்.

சாட்டை

தழ்

ம்பு-2

## எழுத்தாளர் மத்தியில் சீர்குலைவு வேலைகள்

தொழிலாள வர்க்கத்தின் விடிவுப் பாதையைக் காட்டும் மார்க்சிஸ-லெனினிஸக்கொள்கைகளைத் தூர வீசி எறிந்து, தொழிலாளர்களின் வாழ்வுடன் விளையாடும் திரிபுவாதத் துரோகிகள் தாம் கலந்து கொள்ளும் பரந்த இயக்கங்களையெல்லாம் பாழ்படுத்தும் மோசம் தொழிலாளி வாசகர்களுக்கு நன்கு தெரிந்ததே.

இன்று அவர்கள் எழுத்தாளர் அணியையும் சீர்குலைத்து அலங்கோலப்படுத்த முனைந்துள்ளனர். முற்போக்கு இலக்கியம் பற்றியும், புரட்சிஇலக்கியம்பற்றியும், சோஷலிஸ யதார்த்த இலக்கியம் பற்றியும் முன்னர் பேசிய திரிபுவாதிகள், இன்று அவற்றையெல்லாம் ஒருபுறத்தில் ஒதுக்கி, 'சுதந்திர எழுத்தாளர் சங்கங்களை' உருவாக்கும் பெரும்

—8-ம் பக்கம் பார்க்க

# இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் இணையற்ற சாதனை

இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் வெற்றிகரமான சரித்திரத்தைப் பார்க்கும் பொழுது பஸ் தொழிலாளர்களும், ஏனைய மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்களும் ஒரே தொழிற் சங்கமாக இணைந்து இயங்க வேண்டியதின் அவசியம் இன்று நன்ருகப் புலப்படுகிறது.

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைமைப் பீடம் 1944-ம் ஆண்டு இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தை ஆரம்பித்து ஆதன் மூலம் போக்குவரத்துத் தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு அஸ்திவாரமிட்டது.

1952 முதல் 1954 வரையும் புத்துணர்ச்சியும் புதுப்பலமும் பெற்று இயங்கிய இச் சங்கம், போக்குவரத்துத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் அரசியல் ரீதியான, சமூக ரீதியான, பொருளாதார ரீதியான உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் பல போராட்டங்களை நடத்தி, 1955-ம் ஆண்டின் ஆரம்பத்தில் கொழும்பில் முக்கிய பஸ் கம்பெனியான சீ. ஓ. சீ. பஸ் கம்பெனியின் தொழிலாலாளர்களின் பெரும் போராட்டத்தைத் தொடங்கியது. அந்தப் போராட்டத்தை பஸ் முதலாளிகள் எத்தனை ஆத்திரமாக எதிர்த்த போதிலும், பொலிஸும், கொத்தலாவலை அரசாங்கமும் எத்தனை குண்டாந்தடி கொண்டு தாக்கியும் கூட, விடாமல் தொடர்ந்து நடத்தி வெற்றிக்கொடி உயர்த்தியது மோட்டார் தொழிலாளர் சங்கம்.

## சவுத் வெஸ்டன் வேலைநிறுத்தம்

அதற்கு அடுத்தபடியாக சவுத் வெஸ்டன் பஸ் தொழிலாளர்களின் வீராவேசப் போராட்டம் நடைபெற்றது.

இந்த நாட்டில் மிகப்பெரிய தானதும் தெற்குக் கடற்கரை பிரதேசத்தில் ஏகபோக உரிமைசெலுத்தியதுமான சவுத் வெஸ்டன் பஸ் கம்பனியின் தொழிலாளர்கள் தங்கள் கிளைச் சங்கத் தலைவரான தோழர் ஈ. கே. டி. சில்வா உட்படப் பல தொழிற் சங்கத் தலைவர்களை வேலைநீக்கம் செய்ததற்கு எதிராகப் போர்க்களத்தில் குதித்தார்கள். கொழும்பிலிருந்து காலி வரை சிறிய பஸ் வழிகள் உட்பட எல்லாப் பாதைகளிலும் பல நாட்கள் பஸ் போக்குவரத்து அற்றுப்போய் இருந்தது. அதனைத் தொடர்ந்து சீ. ஓ. சீ, மற்றும் கொழும்பு இரத்தினபுரி பஸ் கொம்பெனிகளும் போராட்டத்தில் குதித்தன.

கடந்த காலத்தைப் பார்க்கும் பொழுது, பஸ் தொழிலாளர்கள் ஊழல் நிறைந்த பஸ் முதலாளிகளின் இரக்கமற்ற இரும்புச் சப்பாத்துகளினால் மிதியுண்டு கிடந்த நிலையிலிருந்து அவர்கள் எழுந்து நிற்கமுடிந்தது, ஒற்றுமையாலும் போராட்டத்தாலும் மட்டும்தான் என்பது புலனுகிறது.

பல நாட்களாக முழு பஸ் போக்குவரத்தும் சம்பூரணமாகத்தடைபட்டுநின்றபோது அந்தப் போராட்டத்தை அடக்க யூ. என். பி. அரசாங்கம் பொலிசையும் இராணுவத்தையும் கட்டவிழ்த்து விட்டது. இராணுவத்தால் கூட எதுவும் செய்ய முடியாது போகவே அந்த மிலேச்ச அரசாங்கம் கடைசியில் 24 மணி நேரத்திற்குள் தொழிற்சாலைகளுக்குள் வேலைநிறுத்தம் செய்வதைத் தடைவிதிக்கும் சட்டத்தைப் பிறப்பித்தது. இருந்தும்கூட அநியாயத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த தொழிலாளர்களின் உணர்ச்சிகளை அடக்க முடியவில்லை.

பின்பு 14 நாட்கள் அரசியல், தொழிற்சங்க பேதம் எதுவும் இல்லாமல் நடைபெற்ற சவுத் வெஸ்டன் பஸ் தொழிலாளர்களின் போராட்டம் தற்காலிகமாகத் தோல்வியை ஏற்றுக் கொண்டு முடிவடைந்தது. ஆனாலும் இலங்கையில் தொழிற் சங்க இயக்கம் மேலும் பலம் பெற அந்தப் போராட்டம் வழிசெய்தது.

அத்தோடு அந்தத் தோல்வியிலேயே ஒரு பெரும் வெற்றியும் மறைந்து கிடந்தது. ஏனெனில், அந்தப் போராட்டத்தின் பின்புதான் பஸ் தேசிய மயத்தின் அத்தியாவசியத்தை வலியுறுத்தும் பொதுஜன அபிப்பிராயம் உதித்தது. அத்தோடு பிற்போக்கு யூ.என்.பியின் பாசிஸ

# பஸ் தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு எமது சங்கத்தின் மகத்தான தலைமை

சுயரூபத்தையும் மக்கள் உணரத் தலைப்பட்டனர்.

அப்பொழுது எதிர்க் கட்சித் தலைவரான காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா அவர்கள் மோட்டார் தொழிலாளர் சங்கத்தால் கொழும்பு நகரசபை மண்டபத்தில் நடத்தப்பட்ட மாபெரும் கூட்டத்திற்குத்தலைமைவகித்து ''சவுத் வெஸ்டன் பஸ் ஊழியர்கள் நடக்தும் இந்தப் போராட்டத்தில் பஸ் முதலாளிமார் தாங்களும் மனிதர்களாக இருநது கொண்டு தங்களைப் போன்ற மற்ற மனிதர்களுக்கு இழைக்கும் அநியாயங்களுக்கு ஒரேயொரு மாற்று உண்டு என்ருல் பஸ் சேவையை முற்ருகத் தேசியமயமாக்குவதுதான் ஒரே வழி'' என்று குறிப்பிட்டார்.

பஸ் தேசிய மயத்தின் மூல காரணம் பஸ் தொழிலாளர் நடத்திய போராட்டம்தான் என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

அந்தப் போராட்டத்தின் காரணமாகத் தனது வர்க்கத்தின் எதிர்கால நல் வாழ்வுக்காகப் போராடிய தோழர் டபிள்யு. ஏ. டி. சில்லா 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்தார். இன்று அதே தோழரே பஸ் தொழிலாளர்களை ஒன்று படுத்தவும், அவர்களுடைய கோரிக்கைகளை வென்றெடுக்கவும் முன்னணியில் நின்று உழைக்கிருர். அவரை நாம் வாழ்த்துவோம்.

## கோரிக்கைகள்

இந்தப் போராட்டத்தின் பின்பு 1956-ல் தொழிலாளர் தங்கள் கோரிக்கைகளின் வெற்றியைக் கண்டனர். பஸ் சேவையை தேசிய மயமாக்கவும், பொதுமக்களுக்கு நல்ல போக்குவரத்துச் சேவை ஒன்றைப் பெற்றுக் கொடுக்கவும் இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம் சமர்ப்பித்த கோரிக்கைகளின்படி:-

1. எம். ஈ. பி. அரசாங்கத்திஞல் கொடுக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேறி, பஸ் சேவை விரைவில் தேசிய மயமானது.
2. தேசியமயமான பஸ் சேவையில் தொழிலாளர்களின் சேவை நிரந்தரமாக்கப்பட்டது.

---

கடந்த 11, 12-ந் தேதிகளில், இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் 17-வது மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டை யொட்டி இவ்விசேஷ கட்டுரையை இங்கு வெளியிட்டுள்ளோம்.

---

3. தொழிலாளர்களுக்கு நஷ்டப் பணம், சம்பளப் பாக்கி முதலியவை சம்பந்தமாகக் குறைந்த அளவு சலுகைகளாவது வழங்க அரசாங்கம் முன் வந்தது.
4. பஸ் முதலாளிமார்களின் அதிகாரத்தின் கீழ் அரசியல் மற்றும் தொழிற்சங்க வேலை காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை கிடைத்தது.

இதனல் தொழிற் சங்கப் போராட்டங்களின் போது, வேலைநீக்கம் செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மீண்டும் வேலை பெற்றதை எண்ணி நாம் சந்தோஷப் படுவதோடு தொழில் சம்பந்தமாக எழும் பிரச்சினைகளைத் தீர்க்க நாம் ஒரே தொழிற் சங்கத்தின் கீழ் எல்லாத் தொழிலாளர்களையும் இணைக்கவேண்டியதும் அவசியமாகிறது.

## வீர வரலாறுமிக்க சங்கம் வர்க்க ஐக்கியத்திற்கு வழிகாட்டுகிறது

இ. போ. ச. தொழிலாளர்களுக்கும் அரசாங்க விகிதப்படி வாழ்க்கைச் செலவுச் சம்பளம் வழங்கவேண்டுமென்ற கோரிக்கை ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனல் 1958-ல் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் இ. போ. ச. ஊழியர்கள் உட்பட ஏனைய தனியார்துறை ஊழியர்களையும் சேர்த்து நடத்திய போராட்டத்தால் அரசாங்க அளவு வாழ்க்கைச் செலவுப்படி இ. போ. ச. ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டது.

புது வருஷ முற்பணம் ரூபா 100/- கிடைப்பதும், இலிகிதர்களுக்கு கனகரத்தின அறிக்கையின்படி சம்பளம் கிடைப்பதும் எல்லாம் போராட்டத்தால் அல்லாமல் வேறு எந்த வகையாலும் ஏற்பட்டதல்ல. 14 நாள் சுகவீன லீவு என்பதும், ஆறு மாதத் தற்காலிக சேவைக்குப் பின் நிரந்தரமாக்குவது என்பதும் வெறும் பேச்சுவார்த்தைகளால் மட்டுமல்ல. வேலைநிறுத்தம் செய்வோம் என்ற பயமுறுத்தலாலும் தான் கிடைத்தன.

இ. போ. ச. தொழிலாளர்கள் இன்று அனுபவிக்கும் எத்தனையோ சலுகைகள் நமது தொழிற் சங்கப் போராட்டத்தால் விழைந்தவைதான்.

## 17 நாள் வேலைநிறுத்தம்

இ. போ. ச. அதிகாரிகள் தொழிலாளர்களைப் பழி வாங்கத் தொடங்கியது இன்று நேற்றல்ல. தேசியமயமாக்கப்பட்டபின்பு தங்களுக்குச் சந்தர்ப்பம் வாய்த்த உடனே தொழிலாளர்களின் மீது பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தவும், தொழிற்சங்கத் தலைவர்களை இடமாற்றம் முதலியவற்ருல் துன்புறுத்தவும் ஆரம்பித்தனர். அதற்கு எதிராக 17 நாட்கள் தொடர்ந்து வீரப் போராட்டம் நடத்தி எங்கள் நாட்டில் சரித்திரம் நிலைநாட்டினர் மோட்டார் தொழிலாளர்கள். இவையெல்லாம் இப்படியிருக்க உழுத்துப்போன ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திற்கு வால்பிடிக்கின்ருர்கள் திரிபுவாதத் தலைவர்கள்.


ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை இடதுசாரியாக்கி முற்போக்குப் பாதையில் இட்டுச் செல்வது என்பது திரிபுவாத இடதுசாரித் தலைவர்களால் என்றுமே செய்து முடிக்க இயலாது என்பதை எதிர்காலம் நிச்சயம் நிரூபிக்கத்தான் போகிறது.

இ. போ. ச. வை சீர்படுத்த வேண்டும் என்ருல் அதனை தொழிலாளர்களினதும் பொது மக்களினதும் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கச்செய்ய வேண்டும். இ. போ. ச. வின் நிர்வாக அதிகாரங்கள் அனைத்தும் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளாலும் பிரயாணிகள் சங்கப் பிரதிநிதிகளாலும் ஆக்கப்பட்ட அதிகார சபைகளின் கட்டுப்பாட்டின் கீழ் நடைபெற வேண்டும்.

இ. போ. ச. வின் உள்ளே நிலவும் ஊழல்களும், அதிகாரிகளின் அநீதிகளும் இன்றும் குறைந்தபாடாயில்லை.

காலஞ்சென்ற பண்டாரநாயக்கா 1958 டிசம்பரில் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் அவரைச் சந்தித்த போது சொன்ன கதையையொருமுறை எண்ணிப் பார்ப்போம்.

''தனிப்பட்ட முதலாளிகளின் கீழ் உள்ள ஒரு தொழில் துறையை தேசியமாக்கும் பொழுது, அது தனிப்பட்டவர்களின் நிர்வாக முறைக்கு மாருனதாகப் புதியதொரு முறையில் நிர்வகிக்கப்படவேண்டும். சட்டப்படி ஆக்கப்பட்ட ஒரு சபையால் மட்டும் அதனைத் திறம்பட நிர்வகித்து நடத்த முடியாது. நல்ல சீரான முறையில் அந்தத் தொழில் இயங்க வேண்டும் என்ருல் அந்தத் துறையில் ஈடுபட்ட எல்லோரினதும் ஒத்துழைப்பும் ஒற்றுமையான இயக்கமும் வேண்டும்'' என்று திரு பண்டாரநாயக்கா கூறினர்.



தோழர் தம்மிக குணதாஸ

1962 செப்டம்பர் மாதத்தில் ரத்மலானை டிப்போவின் மோட்டார் தொழிலாளர் சங்கக் கிளையின் தலைவரை வேலை நீக்கம் செய்ததற்கு எதிராகக் கோபித்தெழுந்த தொழிலாளர்கள் 41-ம் இலக்கச் சுற்று நிருபத்தை வாபஸ் வாங்கக் கோரிப் பெரிய போராட்டம் ஒன்றை நடத்தி வெற்றி கண்டார்கள்.

## காட்டிக் கொடுத்தனர்

அடுத்து 9 கோரிக்கைகளைச் சமர்ப்பித்து அதற்கு அரசாங்கம் செவிசாய்க்க மறுத்ததற்காக 17 நாள் வெற்றிகரமாக வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு வேலை நிறுத்தத்தை இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம் நடத்தியது. ஆனல் திரிபுவாதத் தலைவர்கள் தொழிலாளர்களைக் கைவிட்டுக் காட்டிக் கொடுக்க முனைந்ததால் அந்தப் போராட்டம் கைவிடப்பட்டது.

இ. போ. ச. வின் உள்ளே ஒரே தொழிற் சங்கம் தான் இருக்க வேண்டும் என்று கூறி நாம் பல ஆண்டுகளாக அதற்காக உழைத்து வந்துள்ளோம். இதுவரை ஏற்பட்ட போராட்டங்கள் எல்லாவற்றின் போதும் இ. போ. ச வில் உள்ள 3 தொழிற் சங்கங்களும் ஒற்றுமையாக இயங்கி வந்தாலும் இப்பொழுது உள்ள நிலையில் இனிமேல் அப்படி நடப்பது முடியாதபடி திரிபுவாதத் தலைவர்கள் முளைத்திருப்பதால் ஒரே சங்கமாக இயங்க வேண்டியது அவசியமாகிறது.

தொழிலாளர் வர்க்கத்தின் நியாயமான கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக, அதிகாரிகள்நியாயமற்றமுறையில் தொழிலாளர்களைத் துன்புறுத்தும் நிலையை ஒழிப்பதற்காக, தொழிலாளர்களைக் காட்டிக் கொடுக்கும் தலைவர்களை மட்டம் தட்டுவசற்காகப் பெரியதொரு போராட்டத்தை தொழிற் சங்கங்கள் எல்லாம் ஒன்று திரண்டு நடாத்த வேண்டிய நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

அதனல் இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் 17-வது, மாநாடு பஸ் தொழிலாளர்களின் சரித்திரத்தில் புதிய அத்தியாயம் ஒன்றைத் தொடங்கி, ஒற்றுமை எதிர்ப்புச் சக்திகளை முறியடித்து ஒன்றுபட்ட, மேலும் பலம் வாய்ந்த ஒரு தொழிற் சங்கத்தைக்கட்டி எழுப்ப வழி செய்துள்ளது.

17-வது மகாநாடு வாழ்க.;
இ. போ. ச. தொழிலாளர்களின் போராட்டம் வெற்றி பெறுக.!

### இந்திய மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் தலைவர்களின் வேண்டுகோள்

# கட்சியின் லட்சியத்தினைக் காத்திட அழைப்பு

கட்சி ஒற்றுமை பற்றிய தேசியக் கவுன்சிலின் தீர்மானம், தற்பொழுதுள்ள நிலைமைக்குக் கொண்டுசென்ற உண்மையான பிரச்சினைகளை மறைக்கிறது. அதற்கான பொறுப்பை தட்டிக்கழிக்கும் ஓர் முயற்சியே இத் தீர்மானம்.

பிளவு நடவடிக்கைகளை, கட்சி அங்கத்தினர்களில் பெரும்பான்மையோர் எதிர்க்கிறார்கள் என்ற கருத்தில் அவர்களோடு ஒத்துக்கொள்கிறோம். தேசிய கவுன்சிலின் 32 உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு, கட்சி அங்கத்தினர்களில் பெரும்பான்மையோர், பெருவாரியாக ஏன் ஆதரவு அளித்தார்கள் என்பதற்கு இதுதான் பிரதான காரணமாகும். கடந்த இரண்டாண்டுகளாக, டாங்கேயும் அவரைப் பின் பற்றுபவர்களும் உணர்வு பூர்வமாக திட்டமிட்டு பிளவு வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். கட்சி அமைப்பு முறை சட்ட விதிகள் உட்பட கம்யூனிஸ்ட் கட்சியின் எல்லா நிர்வாக விதிகளையும் தூக்கி எறிந்து விட்டனர் என்ற கட்சி அங்கத்தினர்களின் ஆழமான உணர்வுதான் இம் மாபெரும் ஆதரவுக்கு முதன்மையான பொறுப்பாகும்.

கட்சியில் ஒற்றுமையை உறுதிப் படுத்தவும், ஒற்றுமையான கட்சி காங்கிரசை நடத்துவதும்தான், கட்சி அங்கத்தினர்களின் மிகப் பெரும்பான்மையோர் எங்களுடைய யோசனைகளை ஆதரித்துள்ளார்கள் என்ற உண்மையிலிருந்து படிப்பினையை கற்றுக் கொள்ள தேசிய கவுன்சில் மறுக்கிறது. இந்த யோசனைகளைப் பற்றி தேசிய கவுன்சிலின் தீர்மானம் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை.

மாஸ்கோ மாநாடுகளின், 1957, 1960 பிரகடனமும், அறிக்கைகளும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட விஜயவாடா கட்சிக் காங்கிரசின் அரசியல் தீர்மானமும் அறிக்கையும், கட்சி நிர்வாக அமைப்பைப் பற்றிய ஹைதராபாத் தேசிய கவுன்சில் தீர்மானமும், கட்சி ஒற்றுமைக்கான இன்னும் ஓர் சரியான அடிப்படையாக இருக்கிறது. டாங்கே தலைமையில் தேசியக் கவுன்சிலின் பெரும்பான்மையினரால் விஜயவாடாவின் அரசியல் கண்ணோட்டமும், ஹைதராபாத் தேசிய கவுன்சில் கூட்டத்தின் நிர்வாக அமைப்பு முறை தீர்மானமும், மீறப்பட்டதும் இந்தப் போக்கை தடுத்து நிறுத்த நாம் எடுத்த எல்லா முயற்சிகளையும் சீர்குலைத்தும் தான் தற்பொழுதுள்ள நெருக்கடியை கொண்டுவந்துள்ளது. பிளவைத் தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, உண்மையான ஜனநாயக பூர்வமாக தேர்ந்தெடுக்கப்படும் கட்சி காங்கிரசுக்காகவும், 1957, 1960 மாஸ்கோ மாநாடுகளின் பிரகடனத்தையும் அறிக்கையையும் வியாக்கியானம் செய்யும் பிரச்சினை உட்பட, கட்சியை எதிர்நோக்கியுள்ள எல்லா பிரச்சினைகளுக்கும் முழுமையான பகிரங்கமான விவாதத்திற்கும் உறுதியளிக்கும் நிர்வாக அமைப்புக்காகவும், நாங்கள் உறுதியான சரியான ஆலோசனைகளை நீண்ட காலமாக முன் வைத்துக்கொண்டு வருகிறோம். அவர்களுக்கே புரியும் காரணங்களுக்காக, எடுத்த எடுப்பிலேயே இந்த ஆலோசனைகள் நிராகரிக்கப்பட்டன.

> **அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கன்வென்ஷன் மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் தலைவர்களின் தலைமையில் கடந்த 7-ந் தேதி முதல் 12-ந் தேதி வரை ஆந்திர மாநிலத்திலுள்ள தெலுங் கனுவில் நடைபெற்றது. இம்மாநாட்டையொட்டி கட்சித் தலைவர்கள் விடுத்த அறிக்கையை இங்கு பிரசுரித்துள்ளோம். மாநாட்டின் விபரங்கள் அடுத்த இதழில் இடம் பெறும்.**

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், டாங்கே கடிதங்களைப் பற்றியும் அவருடைய பண விஷயங்களைப் பற்றியும் புதிர்கள் வெளிவந்தன. இத்தகைய விஷயங்களில் ஓர் சரியான விசாரணை இருக்கும்பொழுது அத்தகைய ஒரு மனிதர் பதவியை விட்டு விலகுவதுதான் பொதுவாழ்வு கண்ணியத்தின் அடிப்படை விதிகள் வேண்டுவதாகும்.

அதற்கு முன் இரண்டு மாதங்களுக்கு மேல் இருந்தும்கூட, கட்சிக்கு முன்னாலுள்ள இந்த பிரச்சினைபற்றி அதனுடைய தீர்மானத்தில் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. இதற்குப் பதிலாக அவர்களால் அழைக்கப்படுகிற மாற்றுக் கட்சி ஸ்தாபனங்களிலிருந்து நாம் விலகி நிற்க ஒத்துக்கொள்ள அது விரும்புகிறது. பல இடங்களில், எங்கு அவர்களுடைய போக்குக்கு கீழ்படிய மறுக்கிறதோ, அந்த தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டிகளை கீழ்த்தரமான முறையில் கலைத்து விட்டு, போட்டிக் கமிட்டிகளை அமைத்திருக்கிறார்கள் என்ற உண்மை மறைக்கப்படுகிறது.

கட்சியில் இலட்சிய அடிப்படையில் ஒற்றுமையைக் கொண்டுவரும் எந்த நடவடிக்கையையும் நாங்கள் வரவேற்கிறோம். அந்தப் பிரச்சினையில் யாரும் எந்த நேரத்திலும் பேசுவதற்காக தயாராக இருக்கிறோம் என்பது தெட்டத் தெளிவாகும்.

நவம்பர் 1963, தேசியக்கவுன்சில் கூட்டத்தில் கட்சியின் ஒற்றுமையைப்பாதுகாப்பதற்காக ஆலோசனைகள் வைத்த பொழுது இருந்த ஆர்வத்திலேயே இன்று இருக்கிறோம் என்பதை மறுபடியும் திருப்பிக் கூறுகிறோம். ஆனால் இலட்சியங்களின் அழிவில் ஒற்றுமையை கொண்டுவர முடியாது.

ஜனநாயகபூர்வமாக காங்கிரசுக்காகவும் கட்சியின் எல்லா மட்டத்திலும் எல்லா பிரச்சினைகளின் மீதும் கட்டுப்பாடற்ற விவாதத்திற்காகவும், கட்சிக் காங்கிரஸ் வரை விஜயவாடா கொள்கையையும், ஹைதராபாத் நிர்வாக அமைப்பு முறை தீர்மானமும் பின்பற்றப்படும் என்ற உறுதிப்பாட்டுக்காகவும், நாங்கள் வைத்த எங்களுடைய ஆலோசனைகள் ஒத்துக்கொள்ளப்பட்டால்தான் ஒற்றுமை பாதுகாக்கப்படலாம்.

இந்த கடைசி நேரத்திலேயும்கூட, தேசியக் கவுன்சிலின் பெரும்பான்மையோர் கட்சி ஒற்றுமைக்கான விஷயங்களை உண்மையில் பரிசீலனை செய்வார்கள் என்றும் நமது ஆலோசனைகளை ஒத்துக்கொள்வார்கள் என நம்புவோம் என்று தோழர்கள் எம். பசவபுன்னையா, பி. ராமமூர்த்தி, ஹரிகிஷன் சிங் சுர்ஜித் ஆகியோர் கம்யூனிஸ்ட் கட்சியின் ஐக்கியத்தைக் காக்க மேற்கண்ட வேண்டுகோளை பத்திரிகைகளுக்கு விடுத்துள்ளார்கள்.

---

# புரட்சிப் பாதையில் முன்னேறுவோம்

## சீனுகலைத் தோட்டத்தில் தலைவர்கள் முழக்கம்

''இலங்கைத் தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கத்தின் உறுப்பினர்களாகிய நீங்கள், இந்நாட்டு தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகரத் தலைவர் தோழர் என். சண்முகதாஸனை செயலாளராகக் கொண்ட இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் உறுப்பினர்கள். எனவே, இந்த சீனுகலைத் தோட்ட நிர்வாகம் சகல தில்லுமுல்லுகளையும் செய்து உங்கள் ஒற்றுமையைக் குலைக்கப்பார்க்கிறது'' என்று 28-6-64-ந் தேதி, சீனுகலை தோட்ட மேல் கணக்கில் நடந்த கூட்டத்தில் பதுளை மாவட்டப் பிரதிநிதி தோழர் எம்.பி. செல்லையா பேசும்போது குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு தோட்டக் கமிட்டித் தலைவர் தோழர் ஏ. எஸ். நல்லுசாமி தலைமை தாங்கினார்.


அவர் தொடர்ந்து பேசுகையில், ''நாங்கள் இங்கு கூட்டத்திற்கு வரும்போது ஒரு கடிதம் தரப்பட்டது நிர்வாகத்தினால்: திறந்து பார்த்தோம். தோழர் எச். ஜீ. ஏ. டி சில்வா இன்று நடைபெறும் கூட்டத்தில் பேசக்கூடாதாம். தற்செயலாக அத்தோழரும் வேறொரு கூட்டத்திற்குச் சென்றதால் இங்கு வரவில்லை. ஏன்! சீனுகலை தோட்ட நிர்வாகம் இப்படிப் பயங்கொள்ளவேண்டும். தோழர் சில்வா கையில் அணுக்குண்டைக் கொண்டுவந்து இவர்கள் குலையில் போட்டுவிடப் போகிறாரா? இல்லையே! பின் ஏன் அவர்கள் பயப்படுகிறார்கள்: காரணமிருக்கிறது தோழர்களே!

''தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு நேர்மையான புரட்சிகர சிங்களத் தலைவர்கள் தலைமை தாங்க வருவதைக் கண்டுதான் பயந்து சாகிறார்கள்'' என்றார்.

மேலும் பேசுகையில், ''இந்தத் தோட்டத்துப் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. இன்னமும் தீர்க்கப்படவேண்டியதும் உள்ளது. நீங்கள் வாழும் லைன், தண்ணீர் வசதி, போன்றவைகளும் உண்டு. உங்கள் ஒற்றுமையின் உறுதியின் மூலம் இவற்றைச் செங்கொடிச் சங்கம் சாதிக்கும். இன்று நீங்கள் தெரிவு செய்துள்ள தோட்டக் கமிட்டி வழிகாட்டும்'' எனக் கூறினார்.

அடுத்து, உப-பிரதிநிதி தோழர் அ. ராமநாதன் பேசுகையில், கூட்டத்திற்கு எங்களை நீங்கள் ஊர்வலமாக அழைத்து வந்தபோது முழக்கிய கோஷங்கள் என் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. ''புரான் அப்பு கிய பாரே; கெப்பட்டிப் பொல கிய பாரே, மார்க்ஸ் - லெனின்-ஸ்டாலின் கிய பாரே; அபியனவா ஏ பாரே! செங்கொடிச் சங்கம் நீடூழி வாழ்க! கம்யூனிஸ்ட் கட்சி வாழ்க!'' என்று நீங்கள் ஒலித்த குரல் இங்குள்ள சகல தேயிலைச் செடிகளும் கோஷிக்க ஆரம்பித்தால் என்ன செய்வது என்றே சீனுகலை நிர்வாகம் பயத்தால் சாகிறது. அவர்கள் சாக வேண்டியவர்கள்! பயந்து பயந்தே சாகட்டும்! நாம் நமது ஒற்றுமையை வளர்ப்போம். முதலாளித்துவ சுரண்டலை இந்நாட்டை விட்டு மட்டும் ஒழிக்கும் ஒய்வு பெறாது கோஷிப்போம் என்றார்.

''மேலும் பேசுகையில், இன்று 21 கோரிக்கைகள் முக்கிய போராட்டமாயுள்ளது. ஒரு புறம் என். எம். பெரேரா மந்திரிப் பதவி பெற்று தொழிலாளர்களை,



தோழர் எம்.பி. செல்லையா

21 கோரிக்கைகளை காட்டிக் கொடுத்துவிட்டார் முதலாளி மார்களுக்கு. 21 கோரிக்கைக்கான போராட்டத்தில் சீனுகலைத் தொழிலாளர்களும் கலந்துகொள்ளவேண்டும். நீங்கள் இன்று உயர்த்தியுள்ள செங்கொடி பட்டொளி வீசிப் பறக்கட்டும். இன்று நீங்கள் அமைத்த தோட்டக் கமிட்டி தேசிய ஐக்கியத்தின் சின்னம். சிங்களத் தொழிலாளர்கள் இங்கு மிகக் குறைவாகவிருந்தும் மாதர் சங்கத்திற்கு ஒரு சிங்களப் பெண்ணைத் தலைவராக தேர்ந்தெடுத்து மற்றும் தொழிலாளர்களுக்கு வழிகாட்டியுள்ளீர்கள்'' என்றார்.

மற்றும் தோழர் எஸ். பெரியசாமியும் உரையாற்றினார்.

கீழ்க்கண்டவர்கள் தோட்டக் கமிட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

தலைவர்: தோழர் ஏ. எஸ். நல்லுசாமி, உப-தலைவர்: தோழர் எஸ். எம். அப்துல் ஹமீது, செயலாளர்: தோழர் எஸ். பெரியசாமி, பொருளாளர்: தோழர் கே. சதாசிவம், கமிட்டி அங்கத்தவர்கள் தோழர்கள்: பி. சின்னசாமி, ஐ. சேக் மொஹிதீன், டபிள்யு. ஜீ. பொடிசிங்க, பி. கதிர்வேல், டி. எம். கிரிபண்டா, ஆர். அடைக்கன், எஸ். கதிர்வேல்.

கீழ்க் கண்டவர்கள் மாதர் சங்கத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவி: தோழியர் ஏ. லொக்கு மெனிக்கா, உப-தலைவி: தோழியர் பி. ராமாய், செயலாளர்: தோழியர் எஸ். காமாட்சி, கமிட்டி அங்கத்தவர்கள்: தோழியர்கள்: எம். மருதாய், எஸ். குலுசம் பீ, எம். பெத்தாய், பி. பொட்டு, எஸ். சந்தனம், எஸ். குப்புத்தாய், எஸ். லெச்சுமி, ஆர். சபியா பீபீ, செ. வீரம்மாள், ரசூல் பீபீ.

---

பதுளை பி. டபிள்யூ. டீ. தொழிலாளர்கள்

## சங்கம் அமைத்தனர்

கடந்த 24-6-64-ந் தேதி இலங்கைத்தொழிற் சங்க சம்மேளனத்தின் பதுளை கிளைக் காரியாலயத்தில் பி. டபிள்யூ. டீ. தொழிலாளர்கள் கூட்டம் தோழர் எச். ஜி. ஏ. த சில்வா தலைமையில் நடைபெற்றது.

அவர் பேசும்போது, அரசாங்கத்தின் பொறுப்பில்லாது ஓவிசியர்களின் கீழ் வேலை செய்யும் பதுளை பி. டபிள்யூ. டீ. தொழிலாளர்கள் எதுவித பாதுகாப்பும் இல்லாது துன்பப்படுகிறார்கள். குறைந்த சம்பளம், திடீரென வேலையை விட்டு நீக்குதல், ஓவர் டைம் கொடுக்காமல் அதிக வேலை வாங்குதல், சேமலாப நிதி கிடையாது. விபத்தின்போது நஷ்டஈடு கொடுப்பதில்லை ஆகிய நெருக்கடிக்கு உள்ளாகி ஓவசியர்களின் கெடுபிடி அதிகாரத்துக்குஉட்பட்டு அவதிப்படுகிறார்கள். இதை எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவதற்கு நீங்கள் ஒற்றுமைப்பட வேண்டும். சங்கத்தில் இணைந்து செயல்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

பி. டபிள்யூ. டீ. தொழிலாளர்கள், இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் கீழ், ஐக்கிய இன்ஜினியரிங் தொழிலாளர் சங்கத்தில் சேர்வது என ஏகமனதாக முடிவு செய்தார்கள்.

நிர்வாகிகளாக: தலைவர் ஆர். எம். பண்டா, செயலாளர்: எம். எம். அப்புஹாமி, பொருளாளர்: ஆர். ஜேமிஸ், கமிட்டி மெம்பர்கள்: எம். பி. ஜோதிபால, எச். வி. எட்வின், கெ. வில்சன், ஆர். எம். பண்டா, எம். ஏ. கருணாரத்ன, ஆர். வி. சந்திரசேன, ஜேமிஸ் ஆகிய தோழர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

ஜூலை 20-ந் தேதி இந்தோ-சீனசம்பந்தப்பட்ட ஜெனிவா ஒப்பந்தத்தின் 10-வது ஆண்டு விழா நிகழ்கிறது. இதையொட்டி இவ் விசேஷ கட்டுரையை இங்கு வெளியிட்டுள்ளோம்.

# வியட்நாம் மக்களின் போராட்ட வரலாறு

## வியட்நாம் ஐக்கியத்திற்கு முட்டுக்கட்டை யார்?

இந்தோ-சீன சம்பந்தப்பட்ட ஜெனீவா ஒப்பந்தம் உருவாக்கப்பட்ட 10-வது ஆண்டு நிறைவு விழா ஜூலை 20-ந் தேதி நிகழ்கிறது. இதையொட்டி, இன்று அமெரிக்க ஏகாதிபத்திய வெறியர்களுக்கும் அவர்களின் அடிவருடி ஆட்சிக்கெதிராகவும் வீரோதாரப் போராட்டம் நடத்தும் தென் வியட்நாம் மக்களும், தொழிலாளர்களுக்கும் உலகத்துத் தொழிலாள வர்க்கம் தமது பூரண ஆதரவை இத்தினத்தில் தெரிவித்துக்கொள்கிறது.

இத்தினத்தின் முக்கியத்துவம் என்ன?

வியட்நாம் ஒரே ஐக்கிய நாடாகும். தென் கோடியிலிருந்து வட கோடி வரை வியட்நாமிய மக்கள் ஒரே இனத்தவர். 4000 ஆண்டு வரலாறு கீர்த்திமிக்க பழம் பெரும் மக்கள். கடந்த நூருண்டு காலமாக வியட்நாம் மக்கள் அனைவரும் தோளோடு தோள் நின்று பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடி வந்துள்ளார்கள். 1945-ம் ஆண்டு ஆகஸ்டில், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை பூரணமாக வியட்நாமிய மக்கள் ஒழித்துக்கட்டினர்கள். ஆட்சியை நிறுவினர்கள்.

இரண்டாவது உலக யுத்தத்தின் முடிவில் ஜப்பான் சரணாகதி அடைந்ததும், நேச நாட்டுத் துருப்புக்கள், ஜப்பானியர்களை நிராயுதபாணிகளாக்கப் போவதாகக் கூறிக் கொண்டு வியட்நாமுக்குள் நுழைந்தன.

ஜப்பானிய, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடிய வியட்நாமிய மக்கள், மீண்டும் தமது தேசிய விடுதலைப் போராட்டக் கொடியைத் தூக்கினர்.

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வியட்நாம் மக்களின் விடுதலைப் போராட்டம் 9 ஆண்டுகள் நீடித்தது. உலகப் பிரசித்த டியன் பியன் பூ யுத்தத்தின் முடிவில், வியட்நாம் மக்கள் மகத்தான வெற்றிபெற்ருர்கள்.

டியன் பியன் பூ யுத்தம் சரித்திர பிரசித்தமிக்கது. இந்த யுத்தத்தின் மூலம் வியட்நாம் மக்களின் விடுதலை வேட்கையும், சுதந்திர உணர்ச்சியும் உலக மக்களுக்கு தெரியவந்தது.

வியட்நாம் தொழிலாளர் கட்சியின் தலைமையில், கண்ணின்மணியாகத்திகழ்ந்த தலைவர் ஹோ சி மின் காட்டிய விடுதலைப் பாதையை ஏகமனதாக ஏற்று வியட்நாம் மக்கள் முன்சென்றனர்.

டியன் பியன் பூ யுத்தத்திற்குப் பின், பூரணமாகச் சரணுகதி அடைய பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இதைத் தொடர்ந்து ஜூலை 20-ந் தேதி 1954-ல் ஜெனீவா ஒப்பந்தம் உருவாயிற்று. ஜெனீவா ஒப்பந்தம் வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகிய மூன்று நாடுகளின் சுதந்திரம், சுயாதிபத்தியம், எல்லைக் கௌரவம் ஆகியவைகளுக்கு மதிப்புத்தர வலியுறுத்தியுள்ளது. இந்த ஒப்பந்தம் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தது. அதோடு, வியட்நாமில் சமாதானத்தை நிலைநாட்டி, 1956-ம் ஆண்டுக்குள் பொதுத் தேர்தலொன்றின் மூலம், வியட்நாமின் ஐக்கியத்திற்கு வழிகோலவும் உறுதி தந்தது.

ஜெனீவா ஒப்பந்தம் வியட்நாமின் சமாதானத்தைப் பரிபாலிக்க, மேற்பார்வைக் கட்டுப்பாடு கமிஷனுக்கு அதிகாரம் தந்தது. ஜெனீவா ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் பொறுப்பு இந்தக் கமிஷனுக்கே தரப்பட்டிருந்தது.

பத்து ஆண்டுகள் கடந்து விட்டன. இன்னும் வியட்நாம் பிளவுண்டே இருக்கிறது. 10 ஆண்டுகள் கடந்தும், இன்னும் கூட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பிளவுபட்டும், வேறு



**கே. குலவீரசிங்கம்**
(பொதுச் செயலாளர், இலங்கை-வியட்நாம் நட்புறவுச் சங்கம்)

பட்டுமே கிடக்கின்றன. தாய் குழந்தைகளும், அண்ணனும் தங்கையும், கணவனும் மனைவியும் கண்டு பேச இன்னும் முடியாமலேயே இருக்கிறது. செயற்கையில் பலவந்தப் படுத்தப்பட்டுள்ள 17-வது அச்சரேகை வியட்நாம் மக்களை வடக்கு, தெற்கு என்று கூறுபோட்டு வைத்துள்ளது.

வியடநாமின் தெற்கிலும் வடக்கிமிலுமுள்ள மக்கள் தம் தாயகம் மீண்டும் ஐக்கியமுற வேண்டுமென்று அயருது போராடி வருகிருர்கள். தென் வியட்நாமிலுள்ள மக்கள் வறுமையிலும், துன்பத்திலும் அடக்குமுறைக் கொடுமையிலும் சிக்குண்டு தவிக்கிருர்கள். நாளுக்குநாள் அவர்களின் நிலைமை படுமோசமடைந்து வருகிறது.

ஜெனீவா ஒப்பந்தமை உலருமுன்னர், பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு பதிலாக அமெரிக்க யுத்த வெறிக் கும்பல் வியட்நாமுக்குள் புகுந்தது. அமெரிக்க யுத்த வெறிக் கும்பல் புதிய காலனி முறையில் ராணுவத் தளம் அமைத்தது.

தென்-வியட்நாமில் 25,000 அமெரிக்க அதிகாரிகளும், துருப்புக்களும்இருக்கின்றனர். ராணுவத் தளம் உட்பட, எண்ணற்ற யுத்தக் கருவிகள் குவிக்கப்படுகின்றன. தென்-கொரியாவில் ஏற்பட்ட படுதோல்விக்குப் பின்னர், அமெரிக்காவின் யுத்த முஸ்தீபு வியட்நாமில் அதிகரித்துள்ளது.

அமெரிக்க யுத்தவெறிக் கும்பலின் ஆதிக்கம் தென் வியட்நாமில் இன்று மனித வேட்டையை ஆரம்பித்திருக்கிறது. பள்ளிக் கூடங்கள், கோயில்கள் போன்றவை சிறைக் கூடங்களாக மாறின. இன்று 250,000 வியட்நாமிய மக்கள் 109 சிறைகளில் வாடுகின்றனர். இச் சிறைகளில் இன்று அதிகமாக விஷம் கொடுத்து மக்கள் கொல்லப்படுகின்றனர். கற்பழிக்கப்படுதல், கை கால்கள் வெட்டப்படுதல், விரல்களில் ஊசி பாய்ச்சுதல், மார்புகள் துண்டிக்கப்படுதல் இதுபோன்ற ஆயிரமாயிரமான கோரக் கொடுமைகள் இன்று வியட்நாமில் தாண்டவமாடுகின்றன.

தென் வியட்நாமிய தொழிலாளர்களும், விவசாயிகளும், புத்திஜீவிகளும், தேசிய முதலாளிகளும், ராஜதந்திரிகளும் தென் வியட்நாம் விடுதலை முன்னணியின் கீழ் தமது தாயகத்தின் சுதந்திரத்திற்காக அமர போராட்டம் நடத்தி வருகிருர்கள்.

விடுதலை முன்னணியின் பிசகற்ற தலைமையில் எண்ணரிய வெற்றிகளை தென்-வியட்நாம் மக்கள் பெற்று வருகின்றனர். அமெரிக்க வெறிக் கும்பலின் ராணுவத் தந்திரங்களையும் நவீன ஆயுதங்களையும் தென் வியட்நாம் போராளிகள் பொடிப்பொடியாக்கி முன்னேறி வருகின்றனர்.

தென்-வியட்நாமின் விடுதலைக்கும், வியட்நாமின் ஐக்கியத்திற்கும் தியாகம் செழுமிய போராட்டம் நடத்தும் வியட்நாம் மக்களுக்கு இலங்கை மக்கள் தமது பூரண ஆதரவைத் தரவேண்டும்.

# இலங்கைமார்க்சிஸ போதனைக் குழு

அரசியல் பொருளாதாரம் பற்றிய சொற்பொழிவுகள்

| பொருள்: | தேதி நேரம் |
|---|---|
| 2. ஏகாதிபத்திய ஏகபோகத்தின் வளர்ச்சி | 21-7-64 |
| 3. சோஷலிஸப் பொருளாதாரம் | 30-7-64 |

வகுப்புகள் ஆரம்பம் 5 மணி

இவ்வகுப்புகள் டரட் ரோட்டிலுள்ள செஞ்சிலுவை மண்டபத்தில் நடைபெறும். தற்போது ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமே வகுப்புகள் நடைபெறும்.

சொற்பொழிவாளர்:

**தோழர் நா. சண்முகதாசன்**

குறிப்பு: இவ்வகுப்புக்கள் மார்க்சிஸ போதனைக் குழு அங்கத்தவர்களுக்கு மட்டுமே. இக் குழுவில் சேர விரும்புவோர் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

ஈ. டி. மூர்த்தி,
பிரான்சிஸ் பெரேரா,
கூட்டுக் காரியதரிசிகள்.
தோழர் என். எல். பெரேரா

5-ம் பக்கத் தொடர்

பணியில் ஈடுபட்டுள்ளனர். வெட்கங்கெட்ட முறையில் வகுப்புவாதம் பேசிவரும் சாமி சரணங்கரா இம் முயற்சிக்குத் தலைமை தாங்குகின்ருர். அவருக்கு உதவியாக 'மானிதம்' பேசும் ஞான பக்தர்கள் 'கும்பகர்ண' இலக்கிய பிரம்மாக்கள் இயங்குகின்றனர்.

ஸ்ரீ லங்கா எழுத்தாளர் சங்கத்தில் உப-தலைவராக இருக்கும் சாமி சரணங்காராவும் அதில் அங்கத்துவம் வகிக்கும் அவரது பக்தர்களும் ஸ்ரீலங்கா எழுத்தாளர் சங்கம் தமது குறுகிய நோக்கங்களை நிறைவேற்ற இடங்கொடாதது கண்டும், பரந்த நோக்குடன் ஆசிய-ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் உடனடித் தேவைகளைப் பிரதிபலித்தும் திறம்படச் செயல்படுவது கண்டு சகிக்கமுடியாததும், இன்று சீர்குலைவு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். பிற்போக்காளர்களுடன் கூட்டுச் சேர்கின்றனர்.

இச் சீர்குலைகுலைவு வேலையை ஆதரித்து திரிபுவாதப் பீட்டர் கெனமனின் ஊதுகுழலான 'போர்வர்ட்' பத்திரிகை உண்மையான எழுத்தாளர் சங்கங்களை குறுகிய நோக்கம் படைத்தவை எனவும், சாமி சரணங்காராவின் சீர்குலைவு வேலைகளைப் போற்றியும் எழுதியுள்ளது கேலிக்கிடமானது.

இது மட்டுமல்ல தமது அரசியல் துறையிலே நேர்மையான மார்க்சிஸ-லெனினிஸவாதிகளைத் தனிப்பட்ட முறையில் அவதூறுகள் புனைந்து தாக்கியது போலவே எழுத்தாளர்களையும் குறிப்பாக ஸ்ரீ லங்கா எழுத்தாளர் சங்கத்தின் தலைவரையும் நடுவழியில் நின்று தத்தளிக்கும் இக் கும்பல் தாக்க முனைகின்றது. பொய்யும் புனைந்துரையும் கூறுவதில் புகழ்பெற்ற இப் பத்திரிகையை நம்பி எவரும் ஏமாறமாட்டார்களென நம்புகின்ருேம்.

1-ம் பக்கத் தொடர்.

தொழிலாள வர்க்கத்தின் முன் தலைகாட்ட முடியாத நிலை உருவாகும். எனவேதான் 21 கோரிக்கைகளை தொட்டும் தொடாமலும் பிடித்துக்கொண்டிருக்கிருர்கள்.

என். எம். பெரேராவின் மெஜிக் பட்ஜட்டில், பல கோரிக்கைகள் கிடைக்கும் என்று சில தொழிலாளர்கள் எதிர்பார்க்கின்றனர். சில கோரிக்கைகளையாவது என். எம். பெரேரா தருவது வரவேற்கத்தக்கதே. ஆனல், தரப்படாத கோரிக்கைகள் சம்பந்தமாகத் தொழிலாள வர்க்கம் என்ன செய்யவேண்டும்? கோரிக்கைகள் எதுவுமேதராதபட்சத்தில் ஈழத்துத் தொழிலாள வர்க்கம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்து வரும் நாட்களில் தொழிலாளர்கள் முன் உருவாகும் மிக முக்கிய பிரச்சினைகள் இவை. இவைகளுக்குச் சரியான பதில் தர இன்றே தொழிலாள வர்க்கம் தன்னைத் தயார்படுத்த வேண்டும்.

இந்தோ-சீன சம்பந்தமான ஜெனீவா ஒப்பந்தத்தின்
10-வது வருடாந்திர விழாவையொட்டி

**பொதுக்கூட்டம்**

20-7-64, மாலை 5 மணிக்கு புதிய டவுன் ஹாலில் நடைபெறும்

தலைவர்: செனட்டர் சந்திரா குணசேகரா
(கலாச்சார, சமூக சேவை உதவி மந்திரி)

பேச்சாளர்கள் : ரொபர்ட் குணவர்தன எம். பி, பிரேமலால் குமாரசிறி, டி. பி. திஸநாயக்கா, என். சண்முகதாசன், எட்மண்ட் சமரக்கொடி எம். பி, பி. பி. தம்பு மற்றும் சுதந்திரக் கட்சி, ஐ. தொ. கா பேச்சாளர்கள் பேசுவார்கள்.

இலங்கை-வியட்நாம் நட்புறவுக் கமிட்டி

கொழும்பு வாலிபர் உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி
ஆரம்ப விழா வைபவம்
18-7-64 (இன்று) சனிக்கிழமை

**சுகததாஸ ஸ்டேடியத்தில்**

பிரதம அதிதி
கௌரவ திரு. லூயிஸ் மாரிஸி அவர்கள்
(தற்காலிக கியூபா ஸ்தானிகர்) தலைமையில் நடைபெறும்

1-வது போட்டி மாலை 3-45 மணிக்கு
- அளுத்கடை ரேஞ்சர்ஸ்
- கொள்ளுப்பிட்டி ரேஞ்சர்ஸ்

2-வது போட்டி மாலை 5 மணிக்கு
- பிளேமிங் எரோஸ்
- வேல்ஸ் ரேஞ்சர்ஸ்

டிக்கட் -/50 சதம், 1/- 2/50

- மார்க்சிஸ-லெனினிஸ நூல்களுக்கு
- முற்போக்கு இலக்கியங்களுக்கு
- அரசியல் பிரசுரங்களுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்

**யாழ் புத்தக நிலையம்**

431, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஹஸன் மொஹிதீன்பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது: 'தொழிலாளி' அச்சகம் 9, டிமெல் வீதி, கொழும்பு-2.